# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:13 வள்ளுவர் ஆண்டு 2029 புரட்டாதி 08வியாழக்கிழமை (24-09-1998) UTHAYAN A Lively National Tamil Daily சுடர்:257


### சாவகச்சேரி சம்பவத்தை அடுத்து

# பிரதேசசபைதலைவர், 5உறுப்பினர் குறித்துத் தகவல் எதுவும் இல்லை!

## புளொட் அறிக்கை

யாழ்ப்பாணம், செப்டெம்பர் 24

சாவகச்சேரியில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற சம்பவத்தைத் தொடர்ந்து சாவகச்சேரி பிரதேசசபைத் தலைவர் பொன்னையா அன்ரன் மற்றும் அந்தப் பிரதேச சபையின் ஐந்து உறுப்பினர்கள் காணாமற்போய்விட்டனர்.

சாவகச்சேரி சம்பவம் தொடர்பாக புளொட் அமைப்பின் தலைமையகம் நேற்று விடுத்த அறிக்கையில் மேற்கண்ட விவரம் வெளியிடப்பட்டுள்ளது.

சாவகச்சேரிப் பகுதியில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் தொடர்பாக புளொட் அமைப்பின் தலைமை அலுவலகம் அறிக்கை ஒன்றை நேற்று விடுத்தது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது–

புளொட் அலுவலகமாக

(10 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணத்திலும் வாந்திபேதி?

யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ள 6 வயதுச் சிறுவன் ஒருவனுக்கு வாந்திபேதி நோய் ஏற்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

கடந்த வாரம் மன்னாரில் இருந்து திருமலை சென்று கப்பல் மூலம் யாழ். திரும்பிய காரைநகர் பெரியமதவடியைச் சேர்ந்த சிறுவன் ஒருவனுக்கே வாந்திபேதி நோய் ஏற்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

காரைநகர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு பின்னர்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## சாவகச்சேரிச் சம்பவம் படைத்தரப்பு அறிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 24

சாவகச்சேரிசம்பவம் குறித்துப் பலாலி இராணுவத் தலைமையகம் நேற்றிரவு செய்திக் குறிப்பொன்றை வெளியிட்டுள்ளது.

அதன் விவரம் வருமாறு:–

செவ்வாய்க்கிழமை மாலை 5 மணியளவில் சாவகச்சேரி நகரில் புளொட் அலுவலகத்துக்கு அருகில் கடமையில் ஈடுபட்டிருந்த படையினர் அப்பகுதியில் இரு புளொட் உறுப்பினர்கள் ஆயுதத்துடன் நடமாடுவதை அவதானித்தனர்.

ஆயுதத்துடன் நடமாட அவர்களுக்கு அனுமதி இல்லாதபடியால் அப்படி நடந்துகொள்ள வேண்டாம் என்று படையினர் அவர்களிடம் கேட்டுக்கொண்டனர்.

ஆனால் புளொட் உறுப்

(10 ஆம் பக்கம் பார்க்க)

### சாவகச்சேரியில்

## இறந்த மற்றவர் சடலம் இனம் காணப்பட்டது

யாழ்ப்பாணம், செப். 24

சாவகச்சேரியில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இறந்த மற்றவரின் சடலம் அடையாளம் காணப்பட்டுள்ளது.

புங்குடுதீவில் இருந்து இடம்பெயர்ந்து சாவகச்சேரி கச்சாய் வீதியில் வசித்து வந்த செல்வராசா தர்மேஸ் (வயது 18) என்பவரே இறந்தவர் ஆவார்.

இந்தச் சம்பவத்தில் இருவர் உயிரிழந்தது தெரிந்ததே.

உயிரிழந்த மற்றவர் ஈ.பி.டி.பி. அமைப்பைச் சேர்ந்த பச்சிலைப்பள்ளி பிரதேச சபை உறுப்பினர் செல்வம் நந்தகுமார்.

செல்வம் நந்தகுமாருக்கு அஞ்சலி தெரிவிக்கும் வகையில் நேற்று யாழ். நகர் மற்றும் சாவகச்சேரிப் பகுதிகளில் உள்ள ஈ.பி.டி.பி. அமைப்பு அலுவலகங்களில் கறுப்புக்கொடிகள் பறக்க விடப்பட்டிருந்தன.

உயிரிழந்த செல்வராசா தர்மேஸ் சாவகச்சேரி சந்தையில் மரக்கறி வியாபாரம் செய்து வருபவர் என்று தெரி

(10 ஆம் பக்கம் பார்க்க)

## "பிரின்ஸஸ் காஷ்" கப்பல் தகர்ப்பை அடுத்து கைதான ஐவரும் விடுதலை

கொழும்பு, செப். 24

முல்லைத்தீவுக் கடற்பரப்பில் "பிரின்ஸஸ் காஷ்" கப்பல் தாக்கி அழிக்கப்பட்ட சம்பவம் தொடர்பாகக் கைது செய்யப்பட்டிருந்த ஐவரும் நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.

இக்கப்பலின் முகவர் நிறுவனத்தைச் சேர்ந்த மூவரும் இக்கப்பலில் கூடுதல் பொருள் ஏற்றிய எஸ். வி. முருகேசு நிறுவனத்தைச் சேர்ந்த இருவரும் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

விடுதலைப்புலிகள் அமைப்புக்கும், மேற்கண்ட ஐவருக்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## சந்திரிகா--கிளின்ரன் சந்தித்துப் பேசினர்

கொழும்பு, செப். 24

ஐ. நா. சபையின் 53ஆவது கூட்டத் தொடரில் கலந்துகொள்வதற்காக நியூயோர்க் சென்றுள்ள ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்ரனுடன் நீண்ட நேரம் இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாகக் கலந்துரையாடினார்.

கூட்டத் தொடரில் கலந்துகொண்ட தலைவர்களுக்கு ஐ. நா. பொதுச் செயலாளர் கோபி அனான் நேற்றுமுன்தினம் அளித்த விருந்துபசாரத்தின்போதே ஒரே மேசையில், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் பில் கிளின்ரனும் அமர்ந்து இலங்கை நிலைவரம் குறித்துப் பேசினர்.

விடுதலைப் புலிகள் இயக்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## புலமைப் பரிசில் பரீட்சை முடிவு அடுத்த மாதம்

கடந்த ஓகஸ்ட் மாதம் நடைபெற்ற ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை முடிவுகள் அடுத்த மாதம் முதல் வாரத்தில் வெளியிடப்படவிருப்பதாக பரீட்சைத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தப் பரீட்சை முடிவுகள் வழமையாக நவம்பர் அல்லது டிசம்பர் மாதத்திலேயே

(10ஆம் பக்கம் பார்க்க)

## சிங்கள மீனவர்கள் படகுடன் கடத்தப்பட்டனர்

### பொத்துவிலில் சம்பவம்

கொழும்பு, செப். 24

கிழக்கில் பொத்துவில் பொலீஸ் பிரிவுப்பகுதியில் மூன்று சிங்கள மீனவர்கள் அவர்களது கண்ணாடி இழைப் படகுடன் கடத்திச் செல்லப்பட்டுள்ளனர்.

கறுப்பு உடை அணிந்து வந்த ஆயுததாரிகளால் இவர்கள் கடத்திச் செல்லப்பட்டதாக சம்பவத்தைநேரில் கண்டவர்கள் பொலீஸாரிடம் தெரிவித்தனர்.

கண்ணாடி இழைப் படகுடன் 9 குதிரை வலு கொண்ட சுசுக்கி இயந்திரம் ஒன்றும் அவர்களால் கடத்திச் செல்லப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (இ-6)

### இனப்பிரச்சினை தீர்வில்

## அரசு காட்டும் தாமதத்தினாலேயே உயிர்களை இழக்க வேண்டிஉள்ளது

### ஆனந்தசங்கரி குற்றச்சாட்டு

கொழும்பு, செப். 24

சிறுபான்மை மக்களின் பிரச்சினைக்கு அரசியல் தீர்வை முன்வைப்பதில் தாமதம் காட்டப்படுவதால் தமிழர் விடுதலைக் கூட்டணி தனது உறுப்பினர்களின் உயிர்களைத் தியாகம் செய்ய வேண்டியுள்ளது.

இப்படிக் கூறியுள்ளார் தமிழர் விடுதலைக் கூட்டணி சிரேஷ்ட உப–தலைவர் வீ. ஆனந்தசங்கரி.

பி. பி. ஸி. சிங்கள சேவைக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இப்படித் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி போன்று ஐ. தே. கவும் நேர்மையற்ற போக்கைக் கடைப்பிடிப்பதால் தமிழர்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## 6 இலங்கையர்கள் பிலிப்பீன்ஸில் கைது

கொழும்பு, செப் 24

சட்டவிரோதமாக குடியேறுபவர்களை நாடுகளுக்குள் கொண்டு செல்பவர்கள் என்று கருதப்படும் 6 இலங்கையர்களும் ஒரு பங்களாதேஷ் நாட்டவரும் பிலிப்பீன்ஸ் பொலீஸாரினால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இலங்கை மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகளில் இருந்து வேறு நாடுகளில் சட்டவிரோதமாகக் குடியேறுபவர்களை அழைத்து வரும் இக்குழுவுக்கு புள்பா என்றழைக்கப்படும் சின்னராசா குசேலகுமார் என்னும் நபர் தலைமை வகித்

(10 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## பயிற்சி நெறி

யாழ்ப்பாணம், செப். 24

கொக்குவில் மக்கள் நலன் புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் பாடசாலை முதலுதவித் தொண்டர்களுக்கான தலைமைத்துவ பயிற்சி நெறி நாளை முதல் மூன்று நாள்களுக்கு திருநெல்வேலி முத்துத்தம்பி மகாவித்தியாலயத்தில் நடைபெறவிருக்கிறது. (இ-3)


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

முதுமெய்யியல் மாணி தகுதிகாண்

**பரீட்சை 1996**

மேற்படி பரீட்சைகள் 30 - 09 - 1998 அன்று ஆரம்பமாக உள்ளன. இப் பரீட்சைக்குத் தோற்றத் தகுதியுள்ள பரீட்சார்த்திகள் தங்களுக்கான தேர்வு அனுமதி அட்டையை உதவிப் பதிவாளர், தேர்வுகளும் அனுமதிகளும் கிளையில் 21 - 09 - 1998 இல் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.

– பதிவாளர்

18 – 09 – 98

(சி/4970)


# கூட்டுறவுதுறையின் கப்பல்விடயத்தில் தனியார் துறை ஏன் குறுக்கிடுகிறது?

## சமாசத் தலைவர் கேள்வி எழுப்புகின்றார்

யாழ்ப்பாணம், செப். 24

''பொது மக்களுக்கு நியாயமான விலையில் பொருள்கள் கிடைக்க வேண்டும் என்ற நோக்குடன் கூட்டுறவுத்துறை கப்பல் மூலம் பொருள்கள் கொண்டுவரும் விடயத்தில் தனியார் துறை ஏன் குறுக்கிடுகின்றது?''

இப்படிக் கேள்வி எழுப்பியுள்ளார் யாழ். மாவட்ட விவசாய உற்பத்தி சந்தைப் படுத்தல் நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் சி. வி. கே. சிவஞானம்.

யாழ். மாவட்டத்தில் உள்ள ப. நோ. கூ. சங்கங்களின் தலைவர்கள் கலந்து கொண்ட கூட்டம் ஒன்றில் பேசுகையிலேயே அவர் இப்படிக் கேள்வி எழுப்பினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

கப்பல் கட்டணமின்றி பொருள்களைக் கொண்டு வரும் சலுகை ரத்துச் செய்யப்பட்ட பொழுது, சமாசம் பொருள்களைக் கொண்டுவர முடியாத நிலை ஏற்பட்டது. இந்த நிலையை சமாளிக்கும் முகமாக யாழ். அரச அதிபரின் உதவியுடன் 'ஹண்டி' என்ற கப்பல் சமாசத்தால் நாள் கட்டண அடிப்படையில் குத்தகைக்கு அமர்த்தப்பட்டது.

இந்த நடவடிக்கையில் பாரிய நிதி சம்பந்தப்பட்டுள்ளதால், நாம் நிதானமாகவும், சமாசம் பாதிக்கப்படாமலும் இருக்கக் கூடியதாக நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்தது. துரிதமாக பொருள்களை ஏற்றுதலும், இறக்குதலும் செலவினத்தைக் குறைக்கும் என்பதால், ஏற்றுபவர்களின் எண்ணிக்கையைக் குறைத்து ஒழுங்குகள் மேற்கொள்ள வேண்டியிருந்தது.

இந்தச் சூழ் நிலையில் பல தனியார் துறையினர் எமது நடவடிக்கைகளில் நேரடியாகவும், மறைமுகமாகவும், கூட்டாகவும், தனியாகவும், தலையீடு செய்தனர், செய்தும் வருகின்றனர்.

கப்பலில் இடம் ஒதுக்குவதில் நாம் எடுக்க வேண்டிய முடிவுகளை தாம் எடுக்க முனைகின்றனர். இது வருந்தத்தக்கதும், புரிந்துகொள்ள முடியாததும் ஆகும். இவர்களில் சிலர் அவதூறு செய்வதிலும், விஷமப் பிரசாரம் செய்வதிலும் ஈடுபட்டுள்ளனர். தனியார் துறையினர் எவராவது கப்பலைக் குத்தகைக்கு அமர்த்தும் போது நாம் இடம் கேட்டு வற்புறுத்துவதில்லை. அவர்களின் நடவடிக்கைகளில் தலையிடுவதும் இல்லை.

ஆனால், கூட்டுறவுத்துறை கப்பலை குத்தகைக்குஅமர்த்தியவுடன் மட்டும் அவர்கள் தலையிடுகின்றனர். அவர்களைப் போல எமது நடவடிக்கைகளை நிர்ணயிக்கவும், தீர்மானிக்கவும் எமக்கு உரிமையுண்டு என்பதை மறந்து செயற்பட முனைகின்றனர்.

இதன் மூலம் எமது நடவடிக்கைகளை முடக்கினால் நாம் பொருள்களைகொண்டு வராது விட வேண்டி வரும்; அந்த நிலையில் தாங்கள் நினைத்தவிலையில் பொருள்களை விற்கலாம் என்ற உள்நோக்கத்திலேயே சிலர் செயற்படுகின்றனர்,

இப்படி அவர் தெரிவித்தார்.

இந்த விடயத்தை ஆராய்ந்த சபையினர் கூட்டுறவுத்துறை தனது தனித்துவத்துடன், தனியார் துறையின் குறுக்கீடுகளுக்கு இடமளிக்காது செயற்பட்டு தொடர்ந்தும் பொருள்களை கப்பல் மூலம் கொண்டுவந்து நியாயமான விலையில் அங்கத்துவ சங்கங்கள் மூலம் பொது மக்களுக்கு வழங்க வேண்டும் எனவும் முடிவு செய்துள்ளனர். (இ-3-17)

# 5 ஆயிரம் குழந்தைகளுக்கு சொட்டு மருந்து

வலிகாமம்தெற்கு, செப். 24

தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரியின் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் உள்ள 5 ஆயிரத்து 47 குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து கடந்த சனிக்கிழமை வழங்கப்பட்டது.

இப் பிரிவில் உள்ள13 நிலையங்களில் வைத்துபோலியோ மருந்து கொடுக்கப்பட்டது. மருந்து கொடுக்கப்பட்ட நிலையங்களில் கடமையாற்றியசுகாதார தொண்டர்கள், சுகாதார வைத்தியர்கள், சுகாதார தாதிமார்களுக்குத் தேவையான ஒத்துழைப்புக்களை வலிகாமம் வடக்கு, வலிகாமம் தெற்கு பிரதேச சபைத்தலைவர்கள் வழங்கினர்.

சுன்னாகம் லயன்ஸ்கழகமும் இச் செயற்பாடுகளில் பங்கேற்று தேவையான உதவிகளை வழங்கியது. (ஐ-152)

# சடலங்கள் அரச செலவில் அடக்கம்

நெல்லியடி, செப். 24

கரவெட்டி வடக்கு கொற்றாவத்தைப் பகுதியில் சூட்டுக் காயங்களுடன் படையினரால் மீட்கப்பட்டு கடந்த ஞாயிறு காலை மந்திகை மருத்துவமனை சவச்சாலையில் வைக்கப்பட்டிருந்த இரு இனந்தெரியாத சடலங்களும் எவரும் உரிமை கோராத நிலையில் கடந்த திங்களன்று மாலை அரச செலவில் அடக்கம் செய்யப் பட்டுள்ளன.

மந்திகை மருத்துவமனையில் பிரேத பரிசோதனையை பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். கதிரவேற்பிள்ளையும், மரண விசாரணையை பருத்தித்துறை மாவட்ட பதில் நீதிவான் திருமதி விஜயராணி உருத்திரேஸ்வரனும் மேற்கொண்டனர். [ஐ-109]

## பற் சிகிச்சைக் கட்டடம்

தென்மராட்சி, செப். 24

பளை அரச வைத்திய சாலை வளவில் ஆறு லட்சம் ரூபா செலவில் நவீன வசதிகள் கொண்ட புதிய பற் சிகிச்சைப்பிரிவு நிர்மாணிக்கப்படவுள்ளது.

பற்சிகிச்சைப் பிரிவு கட்டடத்திற்கான அத்திவாரக் கல்லை பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் தா. சுவாமிநாதன் நடுகை செய்தார்.

இக் கட்டடத்திற்கான நிதியை யாழ். சுகாதார சேவைகள் மாகாண பிரதிப் பணிப்பாளர் அலுவலகம் வழங்கியுள்ளது. (ஐ-117)


# யாழ். மாவட்ட புகைப்படப்பிடிப்பாளர் கூட்டுறவுச் சங்கம்

(வரையுள்ளது)

பதிவு இல: என். ஜே / 10

245, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

## அறிவித்தல்

கடந்த ஒரு வருட காலமாக

யாழ். மாவட்ட புகைப்படப்பிடிப்பாளர் சங்கம்

என செயற்பட்டு வந்த சங்கத்தை இன்று தொடக்கம் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரின் கீழ்

யாழ். மாவட்ட

புகைப்படப்பிடிப்பாளர் கூட்டுறவுச் சங்கம்

(வரையுள்ளது)

என பதிவு செய்துள்ளோம் என்பதனை அனைத்து புகைப்படப் பிடிப்பாளர்களுக்கும் மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

இ. சிவஞானம் — தலைவர்

ச. முருகதாசன் — செயலாளர்

(59399)



## மரண அறிவித்தல்

திருமதி

**நாகம்மா பொன்னுத்துரை**

7 ஆம் கட்டை சங்கானையைச் சேர்ந்த திருமதி நாகம்மா பொன்னுத்துரை 22. 09. 98 செவ்வாய்க் கிழமை அன்று காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற மலேசியா நீதிமன்ற மொழி பெயர்ப்பாளர் பொன்னுத்துரையின் அன்பு மனைவியும், மகேஸ்வரி, காலஞ்சென்ற ஏகாம்பரம் (மணியம்), செல்லமுத்து, காலஞ்சென்ற லீலாவதி, சரஸ்வதி, சரோஜினிதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும், பாலசுந்தரம், சரஸ்வதி, குலசிங்கம், காலஞ்சென்றவர்களான சுப்பையா, ஜெகநாதன், ஜெயராஜதேவன் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் சமக்கிரியைகள் 24. 09. 98 இன்று வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

சரோஜினிதேவி

ஜெயராஜதேவன்

[தேவி]

7 ஆம் கட்டை,
சங்கானை.

(59379)



## ராஜா டாக்கீஸ்

யாழ்ப்பாணம்.

சத்தியராஜ் (இரு வேடம்)
கஸ்தூரி, சுஜாதா நடித்த

**அமைதிப்படை**

10-30, 2-00, 5-00
(புதிய நேரம்)

(சி/4926)



## நாகம்ஸ் சினிமா

சுன்னாகம்

இன்று மட்டும்
எம் ஜி. ஆர்.
ஜெயலலிதா நடித்த
ஒளிவிளக்கு
( ரீலிஸ் )

காட்சி: 10-30, 2-30

(59394)



## ஸ்ரீ செல்வா

சினிமா

ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

தினசரி
10-30 — 2-30 மணி,
( பழைய நேரம் )

கார்த்திக் - அஜித்
ரோஜா நடித்த
உன்னிடத்தில் என்னைக்கொடுத்தேன்
[illegible]
[illegible] இடவசதி உண்டு.

(59396)


# யாழ். பாடசாலைகள் அணி இன்று கொழும்புக்கு

யாழ்ப்பாணம், செப். 24

யாழ் மாவட்ட பாடசாலைகள் கிரிக்கெட் அணி ஒன்று இன்று கொழும்பு பயணமாகிறது.

கொழும்பு வெஸ்லிக் கல்லூரியின் 125 ஆவது ஆண்டு நிறைவையொட்டி அக்கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் ஏற்பாடு செய்துள்ள ஆறுபேர் கொண்ட — ஆறு ஓவர்கள் சுற்றுப்போட்டியில் பங்குபற்றவே இந்த அணி கொழும்பு செல்கிறது.

யாழ். அணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி வீரர் சபா ஆனந்த் கப்டனாகவும், சென். ஜோன்ஸ் கல்லூரி வீரர் கௌரிபாலன் உதவிக் கப்டனாகவும் இருப்பர். அணி முகாமையாளராக யாழ். மாவட்ட பாடசாலைகள் கிரிக்கெட் சங்கச் செயலாளர் எஸ். தேவராசாவும், பயிற்றுநராக எஸ். நடேசனும் செல்கின்றனர். (இ-3)

## நிவாரண விநியோகம் நீடிப்பு

நல்லூர்ப்பிரதேச செயலர் பிரிவில் இயங்கும் யாழ். பலநோக்குக் கூட்டுறவுச்சங்கக்கிளைகளில்இடம்பெயர்ந்தோருக்கான 64, 65 ஆவது ஏ, பி ஆகிய நிவாரண முத்திரைப் புள்ளிகளுக்கான நிவாரண விநியோகம் நீடிக்கப்பட்டுள்ளது.

மேற்படி புள்ளிகளுக்கான விநியோகத்தை இன்று வியாழக்கிழமை தொடக்கம் நாளை மறுதினம் சனிக்கிழமை வரை வழங்குமாறு நல்லூர்ப் பிரதேச செயலர் பிரிவில் இயங்கும் சங்கக் கிளைகளின் முகாமையாளர்களை சங்கம் கேட்டுள்ளது.

இப்புள்ளிகளுக்கு பொருள்களைப் பெறத் தவறியவர்கள் உடன் பெற்றுக் கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளது. (ஐ-17)

## உதைபந்தாட்ட இறுதிப் போட்டி

சங்கானைக் கல்விக்கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி இன்று யாழ். சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மைதானத்தில் பிற்பகல் 2-15 மணிக்கு நடைபெறும்.

இந்த நிகழ்வில் வலயம் இரண்டின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் என். வரதராஜன் பிரதம விருந்தினராகவும் சங்கானை பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் எம். சிவராசா சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வார்கள். (இ-6)

## லயன்ஸ் மாவட்ட தலைவர் விஜயம்

சர்வதேச லயன்ஸ் கழக 306 பி மாவட்டத் தலைவர் லயன் டாக்டர் எஸ். எஸ். அருளானந்தம் எதிர்வரும் 27 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை சாவகச்சேரி லயன்ஸ் கழக அலுவலகத்திற்கு உத்தியோக பூர்வவிஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளார்.

மாவட்டத்தலைவரின் விஜயத்தையொட்டி அண்மையில் சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினரால் மீசாலை விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் நடத்தப்பட்ட மீசாலைப் பகுதி மக்களுக்கான இலவச மருத்துவ சிகிச்சை முகாமில் கண் பரிசோதனை செய்யப்பட்டு மூக்குக் கண்ணாடி பெறுவதற்கு சிபார்சு செய்யப்பட்ட வறுமைக் கோட்டின் கீழ் உள்ள குடும்பங்களைச்சேர்ந்த 50 பேருக்கு இலவசமாக மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்படவுள்ளன.

மூக்குக் கண்ணாடி வழங்க தெரிவுசெய்யப்பட்டவர்களுக்கான கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக கழகச் செயலாளர் லயன் சு. பொ. செல்லையா தெரிவித்தார். (ஐ-117)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சல்மான் ருஷ்டி விவகாரம் முற்றுப்பெற்று விட்டது!

## நியூயோர்க்கில் கதாமி தெரிவிப்பு

நியூயோர்க், செப். 24

எழுத்தாளர் சல்மான் ருஷ்டி மீது விதிக்கப்பட்ட மரணதண்டனையை நிறைவேற்றும் எண்ணம் அரசுக்கு இல்லை. ருஷ்டி விவகாரம் முற்றுப்பெற்று விட்டது என்று ஈரான் அதிபர் மொஹமட் கதாமி தெரிவித்துள்ளார்.

ஐ. நா. பொதுச்சபையில் உரையாற்றுவதற்காக நியூயோர்க் சென்றிருந்த கதாமி அங்கு மேற்குலக பத்திரிகையாளர்கள் மத்தியில் பேசுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சர்ச்சைக்குரிய எழுத்தாளர் சல்மான் ருஷ்டி விவகாரத்தில் அதிபர் கதாமியின் இந்தக் கூற்று ஒரு திருப்பத்தை ஏற்படுத்தியுள்ளது.

பிரிட்டிஷ் எழுத்தாளரான ருஷ்டி 'சாத்தானின் கவிதைகள்' (The Satanic Verses) என்ற பெயரில் நாவல் ஒன்றை எழுதியிருந்தார். அது இஸ்லாத்தை அவமதிப்பதாக இஸ்லாமிய உலகில் கடும் குற்றச்சாட்டுகள் எழுந்தன. இஸ்லாத்தை அவமதித்ததற்காக 1989 ஆம் ஆண்டு ஈரானின் ஆன்மீகத் தலைவர் ஆயத்துல்லா றொஹல்லா கொமேனி மரணதண்டனை விதித்தார். ருஷ்டியை கொன்றுவிட வேண்டும் என்று உலக இஸ்லாமியர்களுக்கு அவர் உத்தரவிட்டார். அதனையடுத்து எழுத்தாளர் ருஷ்டி தலைமறைவானார். பின்னர் அதிபர் கொமேனி காலமானார்.

கடந்த 9 ஆண்டுகளாக ருஷ்டி பிரிட்டனின் பொலிஸ் பாதுகாப்புடன் தலைமறைவாக வாழ்ந்து வருகிறார்.

ருஷ்டி மீதான மரண தண்டனை உத்தரவை நிறைவேற்றும் எண்ணம் ஈரானிய அரசுக்கு இல்லை என்றும் அதிபர் கதாமி தெரிவித்துள்ளார். அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகளுடன் உறவை வளர்த்துக் கொள்ளும் நோக்குடனேயே ஈரான் அரசு இந்த முடிவை எடுத்துள்ளதாகத் தெரிகிறது. [ஐ]

# ஆப்கன் நாட்டுத் தூதரை சவுதி வெளியேற்றியது!

றியாட், செப். 24

ஆப்கானிஸ்தானுக்கும் அண்டை நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் சீர்குலைந்து வரும் வேளையில் சவுதி அரேபிய அரசு ஆப்கானிஸ்தான் தூதரை நாட்டை விட்டு வெளியேற்றி உள்ளது.

ஆப்கானிஸ்தானில் அதிகாரத்தைக் கைப்பற்றியுள்ள தலிபான்களுக்கும் ஈரானுக்கும் இடையே மோதல் நிலை நீடித்துவரும் வேளையில் ஏனைய அண்டை நாடுகள் தலிபான்களுடனான உறவைத் துண்டிக்கத் தொடங்கி உள்ளன.

இதேவேளை —

காபூலில் உள்ள சவுதி அரேபிய பிரதிநிதிகளையும் சவுதி அரேபியா திருப்பி அழைத்துள்ளது. நாட்டின் தேசிய நலனைக் கருத்திற் கொண்டே ஆப்கானிஸ்தான் தூதுவரை வெளியேற்றியதாக சவுதி செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது. (ஐ-ரீ)

# சூடானின் தென் பகுதிக்கு விமானம் மூலம் உணவு

காார்ட்டும், செப். 24

பட்டினிச் சாவினை எதிர்நோக்கியுள்ள தெற்கு சூடானுக்குத் தேவையான உதவிகளை வழங்க ஐ. நா. உலக உணவுத்திட்டம் தீவிரமாகச் செயற்படுகின்றது.

முதற் கட்டமாக ஜேர்மனிய இராணுவச்சரக்கு விமானம் ஒன்று—அத்தியாவசியப் பொருள்கள் மற்றும் மருந்துப் பொருள்களை ஏற்றிக்கொண்டு சூடான் சென்றுள்ளது.

இப் பொருள்கள் சூடானைச் சென்றடையும் முகமாக அரசும், கிளர்ச்சியாளர்களும் தற்காலிகமாக போர் நிறுத்தத்தை மேற்கொண்டுள்ளனர்.

வறுமையின் கொடுமையினாலும், உள்நாட்டு யுத்தத்தின் காரணமாகவும் சூடானில் பல லட்சம் மக்கள் உயிரிழந்துகொண்டிருக்கின்றனர். (ஐ-ரீ)

# உலக பயங்கரவாதத்துக்கு எதிரான யுத்தம் இஸ்லாமிய - மேற்குலக மோதலாகிவிடக் கூடாது!

## கிளின்ரன் தெரிவிப்பு

ஐ நா. சபை, செப். 24

பயங்கரவாதத்துக்கு எதிரான நடவடிக்கையே எமது பட்டியலில் முதலிடம் பெறவேண்டும் ஆனால் உலக பயங்கரவாதப் பிரச்சினையின் விளைவு இஸ்லாமிய சமூகத்துக்கும் மேற்குலகத்துக்கும் இடையிலான மோதலாக மாறி விடக் கூடாது.

அமெரிக்க அதிபர் பில் கிளின்ரன் கடந்த திங்களன்று ஐ. நா. பொதுச்சபையில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பயங்கரவாதத்துக்கு எதிரான கொள்கை கலாசார சமூகங்களுக்கு இடையிலான மறைமுக மோதலாக உருவெடுத்து வருவதாகச் சிலர் கருதுகின்றனர். மேற்குலகிற்கும், மேற்குலகிற்கு மாறான மற்றும் இஸ்லாமிய சமூகத்துக்கும் இடையிலான மோதலாக அதைக் கருதுகின்றனர். இந்தக் கருத்து முற்றாகத் தவறானது என நான் கருதுகின்றேன்.

அமெரிக்காவின் அலுவல் பட்டியலில்பயங்கரவாதமே முதலிடத்தில் உள்ளது உலகஅலுவல் பட்டியலிலும் அது முதலிடத்தில் இருப்பது அவசியம் என்றும் கிளின்ரன் தனது நீண்ட உரையில் குறிப்பிட்டார். [ஐ]

# உலக அரங்கில்

## உலகின் நீளமான சேலை

பெங்களூர், செப். 24

உலகில் மிக நீளமான சேலை பெங்களூரில் காட்சிக்குவைக்கப்பட்டுள்ளது. 120 மீற்றர் நீளமும் 1. 15 மீற்றர் அகலமும்கொண்ட இந்த சேலையை 'பிருதிவி சிலீச் கிரியேஷன்ஸ்' என்ற நிறுவனம் தயாரித்துள்ளது.

8.5 கிலோ நிறையுடைய இச் சேலை கின்னஸ் புத்தகத்தில் இடம்பெற்றுள்ளது.

இதில் மகாத்மா காந்தியின் படமும், 127 பிரபல பெண்களின் உருவங்களும், 7 உலக அதிசயங்களும் வரையப்பட்டுள்ளன. (ஐ)

## நல்ல உள்ளங் கொண்ட சிறு பெண் மொனீக்கா

### கிளின்ரன் கூறினார்

ஜூரி விசாரணையாளர்கள் முன்னிலையில் அமெரிக்க அதிபர் சாட்சியம் அளித்தபோது எடுக்கப்பட்ட வீடியோ வெளியிடப்பட்டிருப்பதை அடுத்து சாட்சியத்தில் அவர் தெரிவித்த எல்லா விடயங்களும் அம்பலமாகியுள்ளன.

சாட்சியத்தின் ஒருகட்டத்தில் கிளின்ரன் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:

..."அவர் அடிப்படையில் ஒரு நல்ல சிறுபெண். அவளுக்கு நல்ல இதயம் உண்டு. நல்ல மனம் உண்டு. சில துரதிர்ஷ்டவசமான நிலைமைகள் வாய்ப்பினால் அவளுக்கு சுமை ஏற்பட்டிருக்கிறது என நான் எண்ணுகிறேன். ஆனால் அவள் அடிப்படையில் நல்ல பேர்வழி"...

சுன்னாகம் பல நோ. கூ. சங்கம்

(வ—து)

சுன்னாகம்

அறிவித்தல்

சுன்னாகம் பல நோ. கூ. சங்கத்தில் கழிக்கப்பட்ட லொறி ரயர், ரியூப் மற்றும் உதிரிபாகங்கள் பகிரங்க ஏலத்தில் 01-10-98 இல் விற்பனை செய்யப்படவுள்ளன. வேலை நாள்களில் முற்பகல் 9 00 மணி தொடக்கம் பி. ப 5.00 மணி வரை பொருள்களைப் பார்வையிடலாம் எனவும் அறியத் தருகின்றேன்.

— பொது முகாமையாளர்

சுன்னாகம் பல நோ. கூ. சங்கம்,
சுன்னாகம்.
22-09-98. (சி/4969)

தேவை

யாழ். நகரில் உள்ள பிரபல விற்பனை நிலையத்திற்கு அனுபவமுள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. SALES REPRESENTATIVE
(மும்மொழிகள் தெரிந்தவராக இருத்தல் அவசியம்)
(வயது 25 — 40)
2. ஆங்கிலம், தமிழ் தட்டெழுத்தாளர்
(பெண்)

விண்ணப்ப முடிவு திகதி 30 - 09 - 98

இல. 791,
மே/ரா உதயன்,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(59391)

# லெசத்தோ கிளர்ச்சியை அடக்க தென்னாபிரிக்கப் படை சண்டை!

கேப்ரவுண், செப். 24

லெசத்தோவில் அரசுக்கு எதிரான கிளர்ச்சியை அடக்குவதற்காக தென்னாபிரிக்கப் படைகள் அங்கு அனுப்பப்பட்டுள்ளன.

கிளர்ச்சிப்படைகளுக்கும், தென்னாபிரிக்கப் படையினருக்கும் இடையே தொடர்ந்து சண்டைநடந்து கொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஹெலிக்கொப்ரர்கள், கனரக வாகனங்கள் சகிதம் கடந்த செவ்வாய்க்கிழமை அங்கு சென்ற தென்னாபிரிக்கப் படைகள் தலைநகர வீதிகளில் கிளர்ச்சியாளர்களின் கடும் எதிர்ப்பைச் சந்தித்து வருகின்றன.

லெசத்தோ அரசுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்வோர் தலைநகர் மஸேரோ வீதிகளில் கடைகளைக் கொள்ளையடிப்பதிலும், கட்டடங்களுக்குத் தீவைப்பதிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

லெசத்தோவில் கடந்த [illegible] பொதுத் தேர்தலில் அரசு [illegible] எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டியதை அடுத்து அங்கு நெருக்கடி நிலை ஏற்பட்டது. இந்த நெருக்கடியை ராஜீக முறையில் தீர்க்க பிராந்திய நாடுகள் மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியடைந்ததை அடுத்து தென்னாபிரிக்கா நேரடியாகத் தலையிட்டுள்ளது. (ஐ)

## அணுசோதனைத் தடை ஒப்பந்தத்தில் ஒப்பமிட பாகிஸ்தான் தயார்

நியூயோர்க், செப்: 24

அமெரிக்கா தனது நாட்டின் மீதான பொருளாதாரத் தடைகளை நீக்கினால் விரிவான அணுசோதனைகளைத் தடை செய்யும் (சி.ரி.பி.ரி.) உடன்படிக்கையில் கைச்சாத்திடத் தயாராக இருப்பதாக பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் அமெரிக்க அதிபர் பில்கிளின்ரனிடம் தெரிவித்துள்ளார்.

ஐ. நா. பொதுச்சபைக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக நியூயோர்க்சென்ற பிரதமர் ஷெரீப் அதிபர் கிளின்ரனுடன் ஐ.நா. தலைமையகத்தில் பேச்சு நடத்தினார்.

சி. ரி. பி. ரி. உடன்படிக்கையை அதன் தற்போதைய வடிவில் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை என்று கூறி இந்தியா அதில் ஒப்பமிட மறுப்புத் தெரிவித்து வருவது தெரிந்ததே. (ஐ)

## 20 யானைகள் கொலை

இலங்கையில் கிட்டத்தட்ட 20 யானைகள் கடந்த 40 நாள்களில் உயிரிழந்துள்ளதாக வனவிலங்கு உதவிப் பணிப்பாளர் நந்தன அத்தப்பத்து தெரிவித்துள்ளார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கச்சேரி-நல்லூர் (மூத்தவிநாயகர் கோயிலுக்கு அண்மையில்) பிரதான வீதியில் 4½ பரப்பு குடியிருப்பு நிலம் கற்கட்டுக் கிணற்றுடன் உடனடி விற்பனைக்குண்டு; இ. சங்கர், பாரதி பதிப்பகம், 430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (58870)

### தவறிவிட்டது

22-09-98 இல் பெருமாள் கோயிலுக்கும் தெல்லிப்பழை உ. அ. அதிபர் பணிமனைக்கும் இடையில் மூக்குக் கண்ணாடி தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து யாழ். பல்கலைக்கழக நூலகத்தில் ஒப்படைக்கவும். (59386)

சபாரட்னம் பிரியதர்சினி ஆகிய எனது விசேட அடையாள அட்டை (0902010210) நல்லூரில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து 12/3, வைமன் வீதி, நல்லூர் என்ற முகவரியில் ஒப்படைத்து உதவவும். (59374)

அஞ்சலா நவமலர் தர்மவதி தம்பிராஜா என்பவரது தேசிய அடையாள அட்டை (இல. 398450361V), விசேட அடையாள அட்டை (இல. 091000046) ஓய்வூதிய அட்டை (இல. 602498), 3,000 ரூபா பணமும் 22 - 9 - 98 அன்று கஸ்தூரியார் வீதியிலுள்ள ராஜா கிறீம் கவுஸில் தவறிவிட்டன. இதை கண்டெடுத்தவர்கள்: ஆரணி தொலைத்தொடர்பு நிலையம், 337, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். (59377)

### ஜோதிடம்

பொய்யாமொழி ஜோதிடம் இன்று முதல் பிற்பகல் 2 மணி தொடக்கம் தினமும் மல்லாகம் பழம்பிள்ளையார் கோயில் மடத்தில் கூறப்படும். பலன் தவறினால் பணம் திரும்பப் பெறலாம். ஸ்ரீலஸ்ரீ க. சிவஷண்முகானந்தக் குருக்கள். (59329)

### நாய்க்குட்டிகள்

எம்மிடம் பொமனேரியன் ஜேமன் செப்பட் நாய்க்குட்டிகள் 3 ஆணும், 3 பெண்ணும் உடன் விற்பனைக்கு உண்டு. வயது வாரம் ஐந்து. தொடர்பு: 'பறுவதி வாசா' சரஸ்வதி வித்தியாலய வீதி, கரவெட்டி மேற்கு, கரவெட்டி. (59364)

### யாருடையது?

ஒரு மாதத்திற்கு முன்பு சிறிய நகை ஒன்று சுன்னாகம் இலங்கை வங்கிக்கு அருகில் கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் ஆதாரம் காட்டி முகாமையாளரிடம் பெற்றுக்கொள்ளவும். முகாமையாளர், இலங்கைவங்கி, சுன்னாகம். (59373)

## 7 ஆயிரம் குழந்தைகளுக்கு சொட்டு மருந்து

தென்மராட்சி, செப். 24

தேசிய எதிர்ச்சக்தி அளிக்கும் தினமான கடந்த சனிக்கிழமை சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட 19 நிலையங்களில் 6 ஆயிரத்து 773 பிள்ளைகளுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-117)

## தேவை

கொழும்பிலுள்ள பிரபல நிறுவனமொன்றினால் யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்படவுள்ள சேர்விஸ் நிறுவனமொன்றுக்கு போட்டோ பிரதி இயந்திரம், தட்டச்சு இயந்திரம், றோணியோ இயந்திரம் ஆகியவை பழுது பார்ப்பதற்கும், சேர்விஸ் செய்வதற்கும் அனுபவமுள்ளவர்கள் தேவை,

முழுவிவரம், அனுபவச் சான்றிதழ்கள் ஆகியவற்றுடன் 07 - 10 - 1998-க்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

விளம்பரதாரர்
இல. 790, மே/பா உதயன்
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/4955)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



செல்வி
**நிஷாலினி நாகேந்திரம்**
(உயர்தர கணிதப்பிரிவு மாணவி, பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை)

மலர்வு: 21 - 05 - 1981
உதிர்வு: 25 - 08 - 1998

அருமைக்கொரு புத்திரியாய் ஆசைக்கொரு குலக்கொழுந்தாய்
நெஞ்சத்தை விட்டகலா முழுமதியாய் பட்சமுடன் நாம் வளர்த்த பஞ்சவர்ணக்கிளியாய்
ஒன்பது மணிநேரத்தில் ஏவல் பூரான் உயிர்குடித்த காவியமாய்
என்றென்றும் நாம் வணங்கும் தெய்வமதாய் நீடூழி வாழியவே!

எமது மகளின் மரணச் சடங்கில் கலந்து கொண்டவர்கள், அனுதாபச் செய்திகளை அனுப்பியவர்கள், ஆறுதல் வார்த்தை கூறியோர் மற்றும பல வழிகளில் உதவி ஒத்தாசை புரிந்தோர் அனைவருக்கும எமது இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

இன்று வியாழக்கிழமை (24-09-98) எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேஷ்டி, சபிண்டீகரண நிகழ்வுகளில் பங்குபற்றி சிறப்பித்து அன்னாரின் ஆத்மா சாந்தியடைய வேண்டுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

நாகேந்திரம் குடும்பத்தினர்

'சுகிஸ்தான்',
இலகடி, அல்வாய்.

(59343)

## பரிசளிப்புவிழா-1998
## யா/தேவரையாளி இந்துக்கல்லூரி
கரவெட்டி

காலம்: 1998 - 09 - 25 பிற்பகல் 2. 00 மணி

பிரதம விருந்தினர்:
பேராசிரியர் அ. சண்முகதாஸ்
B. A. (Hons) Ph. D, (Edin)
(கலைப்பீடாதிபதி, யாழ். பல்கலைக்கழகம்)

சிறப்பு விருந்தினர்:
திரு. வை. அருளானந்தம்
B. A. (Maths) S. L. E. A. S
(பிரதிக்கல்விப்பணிப்பாளர், மருதங்கேணி)

பரிசில்வழங்கல்: பிரதம விருந்தினர்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
[illegible]
[illegible]

(சி/4965)

மழைக்கு முன்பாக

## வலி.வடக்கில் 20 வீதிகள் அவசரமாகப் புனரமைப்பு

வலிகாமம் தெற்கு, செப். 24

அவசர நடவடிக்கையாக ஒழுங்கைகள், வீதிகள் புனரமைத்தல் பராமரித்தல் திட்டத்தின் கீழ் வலிகாமம் வடக்கு பிரதேச சபையினரின் எல்லைக்குள் இருபது வீதிகள் புனரமைக்கும் பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மக்கள் மீளக் குடியமர்ந்துள்ள பிரதேச இடங்களின் அபிவிருத்தி வேலைகளுக்கு பிரதேசசபை முன்னுரிமை வழங்கி செயற்பட்டு வருகின்றது.

ஒழுங்கைகள், வீதிகள் புனரமைக்கும் பணிகளுக்கென ஐந்து இலட்சம் ரூபாவை பிரதேசசபை ஒதுக்கியுள்ளது.

மழைகாலம் ஆரம்பமாவதற்கு முன்பாக ஒழுங்கைகள், வீதிகள் புனரமைப்பு செய்யப்படவேண்டி இருப்பதால் புனரமைப்பு பணிகளை மல்லாகம்— தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினரிடம் பிரதேசசபையினர் ஒப்படைத்துள்ளனர்.

எதிர்வரும் ஜனவரி மாதத்தில் இருந்து இப்பிரதேச சபையினரால் மேற்கொள்ளப்படும் வேலைகள்யாவும் 'விலைமனுக்கோரல்' அடிப்படையிலேயே வழங்கப்படும் என பிரதேசசபை உறுப்பினர் ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார். (ஐ-152)

## பாராட்டு விழாவிற்கு ஏற்பாடு

வலிகாமம் தெற்கு, செப். 24

அண்மையில் கலாபூஷண விருதுபெற்ற மிருதங்க வித்துவான் க. ப. சின்னராசாவுக்கு பாராட்டுவிழாவொன்றை நடத்த இணுவில் மக்கள் ஏற்பாடு செய்து வருகின்றனர்.

இணுவில் கந்தசாமி கோயில் இளம் தொண்டர் சபை மண்டபத்தில் எதிர்வரும் ஒக்ரோபர் 11 ஆம் திகதி மேற்படி பாராட்டு விழா நடைபெறும்.

கோப்பாய் ஆசிரிய பயிற்சி கலாசாலையில் பகுதிநேர விரிவுரையாளராக நீண்டகாலம் சேவையாற்றி வரும் சின்னராசா இராமநாதன் நுண்கலைப் பீடத்திலும் பகுதிநேர மிருதங்க விரிவுரையாளராகக்கடமையாற்றினார். (ஐ-152)

## யாழ். கனகரட்ணம் மத்திய மகா வித்தியாலயம்
## தரம் 6 அனுமதி 1999

மேற்படி அனுமதிக்கான விண்ணப்பங்கள் 25 - 09 - 98 முதல் ஏற்றுக்கொள்ளப்படும்.

01. கல்லூரி அலுவலகத்தில் விநியோகிக்கப்படும் படிவத்திலேயே விண்ணப்பிக்கமுடியும்.
02. விண்ணப்ப முடிவுதிகதி 12 - 10 - 98 ஆகும்.
03. தமிழ், கணிதம் ஆகிய பாடங்களில் அனுமதிப் பரீட்சை நடைபெறும். பரீட்சைத் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

- அதிபர்

(சி - 4968)

## யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை
பருத்தித்துறை
## வகுப்பு 6 இற்கான அனுமதி - 1999

மேற்படி வகுப்புக்கு மாணவர்களைச் சேர்ப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்களை பாடசாலை அலுவலகத்தில் பெறலாம்.

முடிவு திகதி: 30-10-1998

- அதிபர்

[சி/ 4967]

## கண்ணீர் அஞ்சலி

நாரந்தனை விவசாய சம்மேளனத்தின் செயலாளரும், நாரந்தனை ஸ்ரீ தான்தோன்றி மனோன்மணி அம்பாள் ஆலயத்தின் பொருளாளரும் ஆகிய

திரு. சி. தனபாலனின் தந்தையார்

**பொன்னம்பலம் சிவலிங்கம்**
(ஓய்வுபெற்ற படவரைஞர் நில அளவைத் திணைக்களம்)

அவர்களின் மறைவை இட்டு எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

- நாரந்தனை மக்கள்

(59387)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காவலரன் நோக்கி வந்தவரை பயங்கரவாதி என எண்ணிச்சுட்டேன்

## வழக்கு விசாரணையில் சிப்பாய் சாட்சியம்

யாழ்ப்பாணம், செப். 24

விடுதலைப்புலி உறுப்பினர் என நினைத்தே துப்பாக்கியால் சுட்டேன். சுடப்பட்டு இறந்தவரின் உடலை நான் பார்க்கச் சென்றபொழுது மக்கள் அங்கு சூழ்ந்து நின்றார்கள். இறந்தவர் பயங்கரவாதியாக இருக்க மாட்டார் என்பதனை அப்பொழுது தான் உணர்ந்து கொண்டேன்.

இவ்வாறு 1996 ஏப்ரல் 28 ஆம் திகதி சாவகச்சேரி மட்டுவில் பிரதேசத்திலுள்ள காவலரண் பகுதியொன்றில் வைத்து இராணுவத்தால் எஸ். கணேசலிங்கம் என்ற பொதுமகன் சுட்டுக் கொல்லப்பட்டது தொடர்பான வழக்கில் சாட்சியமளித்த வீரபாண்டி கெதர குமாரசிங்க (23 வயது) என்ற இராணுவ சிப்பாய் தெரிவித்தார்.

யாழ். நீதிமன்றத்தில் மேலதிக நீதிவான் மு. திருநாவுக்கரசு முன்னிலையில் அவர் சாட்சியமளித்தார்.

அவர் தனது சாட்சியத்தில் மேலும் கூறியதாவது:-

சம்பவ தினம் குறிக்கப்பட்ட காவலரணில் தனித்து காவல் கடமையில் ஈடுபட்டிருந்தேன். என்னுடனிருந்த சக வீரர்கள் பிரிகேடியரை சந்திக்கச் சென்றமையினாலே நான் தனிமையிலிருக்க வேண்டியேற்பட்டது. மாலை 5 மணிக்கு நான் கடமையைப்பொறுப்பேற்றேன். இந்தப்பகுதியில் நான் கடமையேற்றதற்கு முதல் நாள் படையினர் ஒருவர் கொல்லப்பட்டார். அதனால் நான் உஷார் நிலையிலிருந்தேன். பிஸ்ரல் குழு உலாவுவதால் நான் மிகக் கவனமாக இருந்தேன். 25 மீற்றர் தொலைவில் நின்ற ஒருவரை முன்னுக்கு வரவேண்டாம் என்று நான் தடுத்தேன். அவர் வர முயன்றபொழுது எனக்கு மேலும் சந்தேகம் ஏற்பட்டது அப்போது அவர் மடியில் கையை வைத்தார். நான் 'ரி56ரக' துப்பாக்கியால் சுட்டேன். உடனே அவர் நிலத்தில் வீழ்ந்தார்.

துப்பாக்கிச் சூடு இடம்பெற்ற 15 நிமிடத்தில் பிறிகேடியர் வனிகசேகரா அவ்விடத்திற்கு வந்தார். அவர் என்னை விசாரித்த பொழுது நான் புலி என நினைத்து சுட்டதாகச் சொன்னேன். அவர் புலிபோல் தெரியவில்லை என்று சொன்னார்.

இங்கு பொலீஸ் நிலையம் இல்லாதபடியால் என்னை அனுராதபுரம் பொலீஸ் நிலையத்தில் ஆஜர் செய்தார்கள். அங்கு என்னிடம் வாக்கு மூலம் பதியப்பட்டது—இப்படி அவர் தெரிவித்தார். (ஐ-5)

# வடமராட்சி வடக்கில் ரூ.5ஆயிரம் கொடுப்பனவு

நெலவியடி, செப். 24

வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் பிரிவில், மீளக்குடியமர்ந்த மக்களுக்கு ஐயாயிரம் ரூபா கொடுப்பனவு இம்மாத இறுதியில் வழங்கப்படவுள்ளது.

இதற்கென யாழ். அரச அதிபரினால் 38 இலட்சம் ரூபா வடமராட்சி வடக்கு பிரதேச செயலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாகவும், மீளக்குடியமர்ந்த மக்களுக்கு அவர்கள் விண்ணப்பித்த ஒழுங்கில் கொடுப்பனவு வழங்கப்படுமென்றும் திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் என். மகேந்திரன் தெரிவித்துள்ளார். (ஐ-109)

# மரவேலை பாடசாலையை புனரமைக்க நிதி ஒதுக்கீடு

சுன்னாகத்தில் உள்ள அரசாங்க மரவேலைப் பாடசாலை புனரமைக்கப்படவுள்ளது.

கடந்த கால வன்செயல்களின் போது இப்பாடசாலை சேதமடைந்திருந்தது. இப்பாடசாலையைப் புனரமைப்புச் செய்வதற்கு 10 இலட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தின் நுண்கருத் திட்டத்தின் கீழ் இப்பாடசாலை புனரமைப்புச் செய்யப்படவுள்ளது.

இதேவேளை —

இப்பாடசாலைக்கான இயந்திரங்கள், உபகரணங்கள் ஆகியனவும் அரசாங்கத்தால் வழங்கப்படவுள்ளன. (ஐ-27)

# நல்லொழுக்க தினத்தை முன்னிட்டுப் போட்டிகள்

எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 3 ஆம் திகதி நடைபெற உள்ள நல்லொழுக்க தினத்தை முன்னிட்டு சித்தங்கேணியில் உள்ள வட பிரதேச நல்லொழுக்க சம்மேளனத்தினரால் பாடசாலை மாணவர்களிடையே பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி, கவிதைப் போட்டி, சித்திரப் போட்டிகள் நடத்தப்பட உள்ளன.

மேற்படி போட்டிகள் எதிர்வரும் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெற உள்ளன.

மேற்பிரிவு, மத்திய பிரிவு, கீழ்ப்பிரிவு என்ற மூன்று நிலைகளில் நடைபெறும் இப்போட்டிகளில் வெற்றி பெறும் மாணவர்களுக்கான பரிசுகள், சான்றிதழ்கள் நல்லொழுக்கதின விழாவில் வைத்து வழங்கப்படுமென நல்லொழுக்க சம்மேளன செயலாளர் வி. ரவீந்திரன் தெரிவித்துள்ளார். (ஐ-152)

## வெளிவாரிப் பிரிவு மூலம்

# 165 பேர் இம்முறை பட்டதாரிகளாகச் சித்தி

யாழ்ப்பாணம், செப். 24

யாழ். பல்கலைக்கழக வெளிவாரிப் பரீட்சைகள் பிரிவினரால் கடந்த 9 ஆம் திகதி வெளியிடப்பட்ட பரீட்சை முடிவுகளின்படி 165 பேர் கலைமாணிமற்றும் வணிகமாணி, சிறப்புக் கலைமாணிப் பட்டங்களைப்பெறவுள்ளனர்.

இதன்படி கலைமாணிப் பட்டத்தை 125 பேரும், வணிகமாணிப் பட்டத்தை 38 பேரும், சிறப்புக்கலைமாணிப் பட்டத்தை 2 பேரும் பெறவுள்ளனர்.

சிறப்புக் கலைமாணிப் பட்டத்தை கிறிஸ்தவ நாகரிகத்தைப் பாடமாகக் கொண்டவர்கள் பெறுகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது. [உ-7]

# பீரிஸின் யோசனையை ஐ. தே. க. ஆதரிக்காது!

## அக்கட்சி எம். பி. கூறுகிறார்

கொழும்பு, செப் 24

"நாட்டைத் துண்டாடும் அமைச்சர் பீரிஸின் சமஷ்டி யோசனைக்கு ஐ. தே. க. ஆதரவு வழங்க மாட்டாது"

—இவ்வாறு ஐ. தே. க. நாடாளுமன்ற உறுப்பினர் லொக்கு பண்டாரா நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

அவர் அங்கு பேசுகையில் மேலும் கூறியதாவது:-

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண ஐ. தே. க. தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் ஆதரவை அரசு கோருகிறது. நாடாளுமன்றத்தில் 16 வாக்குகளையாவது தருமாறும் அரசு கேட்கிறது.

நாம் அரசாங்கத்தை பொதுமக்கள் ஐக்கிய முன்னணியிடம் ஒப்படைக்கும் போது தமிழர் பிரச்சினைக்கு ஓரளவு தீர்வைக் கண்டிருந்தோம். ஆனால் அரசு அதற்குப் பின்னர் ஒன்றும் செய்யவில்லை—இப்படி அவர் கூறினார். (உ-3)

# உதைபந்தாட்ட இறுதிப்போட்டி

உடுவில் கல்விக்கோட்ட பாடசாலைகளுக்கிடையே நடைபெற்று வரும் கோட்ட மட்ட உதைபந்தாட்டத்தின் இறுதிப் போட்டிகள் இன்று வியாழக்கிழமை கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் நடைபெற உள்ளன.

இப்போட்டிகளில் 16 வயதுக்குட்பட்டோருக்கான போட்டியில் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணியை எதிர்த்து கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை அணியினரும் —

18 வயதுக்குட்பட்டோருக்கான போட்டியில் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணியை எதிர்த்து ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாசாலை அணியினரும் மோத உள்ளனர்.

இச் சுற்றுப் போட்டியின் மூன்றாம் இடத்துக்கான போட்டிகளின் போது 16 வயதுக்குட்பட்டோர் பிரிவில் இணுவில் மத்திய கல்லூரி அணியினரை எதிர்த்து விளையாடிய ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலய அணியினர் 1 - 0 கோல்களால் வெற்றியீட்டினர்.

18 வயதுக்குட்பட்டோருக்கான போட்டியில் கந்தரோடை தமிழ்க் கந்தையா அணியினருடன் இணுவில் மத்திய கல்லூரி அணியினர் எதிர்த்து விளையாடினர். இரு அணியினரும் கோல் எதுவும் போடாத நிலையில் "பனால்ட்டி" உதை வழங்கப்பட்டபோது தமிழ்க் கந்தையா வித்தியாலய அணியினர் 3 - 1 கோல் கணக்கில் வெற்றியீட்டினர். (ஐ - 152)

# வாசகர் திருமுகம்

## எட்டுவருட காலமாக நீடிக்கும் நிவாரணவிநியோகச் சிக்கல்

1991 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 18 ஆம் திகதி நாங்கள் எமது சொந்த இடமாகிய தீவகத்தில இருந்து இடம் பெயர்ந்து எட்டு வருடகாலமாக யாழ்ப்பாணத்தில் வசித்து வருகிறோம். எமது சொந்த இடத்திற்கு மீளக்குடியேறும் நிலை உருவாகியும் அங்கு சென்று வசிப்பதற்கு எமது வீடுகள் முற்றாக அழிக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் நிரந்தர தொழில் இல்லாமையால் யாழ்ப்பாணத்தில் வசிக்கும் வீட்டிற்கு வாடகைப் பணம் கட்டுவதற்கே கஷ்டமான நிலையில் உள்ள எமக்கு அரசினால் வழங்கப்பட்ட நிவாரண உதவியும் வெட்டப்பட்டுள்ளது. அத்தோடு அரசினால் வழங்கப்பட்ட 5 ஆயிரம் ரூபாவோ வேறு எந்த உதவியுமோ எமக்கு இதுவரையும் கிடைக்கவில்லை.

நல்லூர்ப்பிரதேச செயலர்பிரிவிலும், கோப்பாய்ப் பிரதேச செயலர் பிரிவிலும் வசிக்கும் தீவக மக்களுக்கு நிவாரண முத்திரை வழங்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவில் வசிக்கும் நாங்கள் கிராமசேவை அலுவலரிடம் சென்று முத்திரை வழங்குமாறு கேட்டபோது ஏற்கனவே இடம்பெயர்ந்து இங்கு வசிப்பவர்களுக்கு முத்திரை வழங்கப்படமாட்டாது. இங்கு வசிப்பவர்களுக்குத் தான் வழங்கப்படும் எனக் கூறப்பட்டது

நிவாரண அட்டையைக் கொண்டு யாழ்ப்பாணம் ப.நோ. கூ. சங்கக் கிளை ஒன்றுக்கு அரிசி வாங்கச் சென்றபோது "உ" அட்டைக்குத்தான் 5 கிலோ அரிசி வழங்கப்படும் இந்த அட்டைக்கு அரிசி வழங்கப்பட மாட்டாது எனக் கூறப்பட்டது. இந்த நிலையில் எம் போன்ற மக்கள் என்ன செய்வது?

வி. கமலாம்பிகை

யாழ்ப்பாணம்.

## சுகாதாரச் சீர்கேடு

வன்னியில் இருந்து குருநகர் ஊடாக யாழ் வருபவர்களை தங்க வைக்கும் இடமாக சீனோர் முகாம் காணப்படுகின்றது.

இங்கு சுகாதார நிலைமை சீர்கெட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதில் மக்கள் மலசல கூடங்களைப் பொறுப்பில்லாமல் பயன்படுத்தல் முக்கியமானதாகும். பெருந்தொகையான மக்கள் வன்னிப் பெருநிலப்பரப்பில் இருந்து வந்து தங்குவதால் மலசலகூடங்கள் பற்றாக்குறையாகக் காணப்படுவதுடன் பொறுப்புணர்ச்சியுடன் பயன்படுத்துவதுமில்லை. இதனால் பல தொற்று நோய்கள் ஏற்பட வழியுமுண்டு.

அதைவிட உணவில் ஏற்படக் கூடிய பிரச்சினைகளில் முக்கியமானவையாக மக்களுக்கு முகாமில் வழங்கப்படும் உணவு, முகாமில் உள்ள தேநீர்ச்சாலையில் பெறும் உணவு ஆகும். இதனாலும் மக்கள் பல நெருக்கடிக்கு உள்ளாகின்றார்கள்.

இங்கு மக்கள் படும் துன்பங்கள் எல்லோருக்கும் தெரிவதில்லை. இதற்குத் தீர்வுகாண முற்படுகின்றபொழுது பின்வருவோர் கவனம் எடுக்க வேண்டும்.

சீனோர் முகாம் மலசல கூடங்களைப் பராமரிக்கின்ற பராமரிப்பாளர்கள், கிராம சேவையாளரின் மூலம் இலவசமாக வழங்கப்படும் உணவினைத் தயாரிப்பவர்கள், முகாமில் உள்ள தேநீர்ச்சாலையில் விற்பனையாகும் உணவுகளைத் தயாரிப்பவர்கள் ஆகியோர் முகாமில் தங்கும் மக்களின் நிலைப்பாட்டினைக் கருத்திற் கொண்டு செயற்படுதல் வேண்டும்.

இதனைச் செயற்படுத்தும் சகல சமூக நல உத்தியோகத்தர்கள் கவனம் எடுத்துச் செயற்படுத்துவதன் மூலம் இத்துன்பங்களினை ஓரளவு குறைத்துக் கொள்ள முடியும் என்பது திண்ணம்.

இம் முகாமில் தங்கவைக்கப்படுவர்களும் தமது சுகாதாரத்தைப் பேணுவதன் மூலமும் தொற்றுநோய்கள் ஏற்படும் அபாயகரமான நிலையிலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ளலாம்.

நா. செந்தமிழ்ச்செல்வன்

புளியங்கூடல்.

## ஏன் இந்தப் பாரபட்சம்?

எமது கிராமத்திற்கு அருகில் உள்ள கிராமங்களான மானிப்பாய், கொக்குவில், சுதுமலை போன்ற கிராமங்களுக்கு மின்சாரம் வழங்கப்பட்டபோதிலும் எமது ஆனைக்கோட்டை கிராமத்துக்கு மின்சாரம் இன்னும் வழங்கப்படவில்லை. வேறு கிராமங்களுக்கு புதிது புதிதாக மின் கம்பங்கள் கொண்டு சென்று செப்பனிடப்படுகின்றன. ஆனால் எமது கிராமத்துக்கு மின்சாரம் வழங்க இதுவரை எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எமது கிராமத்தில் மின்சாரம் எப்போ கிடைக்கும் என்று மக்கள் அவாவோடு எதிர்பார்க்கின்றார்கள். மேலும் எமது கிராமத்தில் கடந்த சில மாதங்களாக திருடர்களின் தொல்லை தினமும் அதிகரித்துக் கொண்டு வருகின்றது. இதனைத் தடுத்து நிறுத்துவதற்கும் எமது கிராமத்திற்கு விரைவில் மின்சாரம் வழங்குவதற்கும் சம்பந்தப்பட்ட தரப்பினர்கள் நடவடிக்கை எடுப்பார்களா?

க. ஜெயகணேசன்.

உயரப்புலம்,
ஆனைக்கோட்டை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
ஓம் சக்தி
அருள்மிகு
# ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
சாவகச்சேரி.
## நவராத்திரி விழா

அன்புடையீர்!

மேற்படி தேவஸ்தானத்தில் 21 - 9 - 98 திங்கள் முதல் 30 - 9 - 98 புதன் கிழமை வரை நவராத்திரி விழா பி. ப. 3 மணிக்கு ஆரம்பித்து நடைபெறுகிறது. பத்தாம் நாள் விஜயதசமி அன்று 30 - 9 - 98 புதன் கிழமை காலை பிள்ளைகளுக்கு வித்தியாரம்பம் ( ஏடு தொடக்கல் ) நடைபெறும். அன்று பிற்பகல் 2. 30 மணிக்கு கேதாரகௌரி விரத ஆரம்பம் நடைபெறும்.

அனைவரும் வருக. அன்னை அருள் பெறுக.

நன்றி.

ப. மகாகணபதிசர்மா
தர்மகர்த்தா

(59382)

# சஞ்சிகை வெளியீட்டு விழா

வலிகாமம் தெற்கு, செப். 24

யாழ்ப்பாணக் கல்லூரியின் மருதனார்மடம் விவசாயக் கல்லூரியில் பயிற்சிகளை மேற்கொண்டு வரும் மாணவர்களால் உருவாக்கப்பட்டுள்ள "விவசாய நோக்கு" என்ற சஞ்சிகையின் வெளியீட்டுவிழா, மேற்படி நிறுவனத்தின் அதிபர் த. குகவாசன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

தென்னிந்தியத் திருச்சபையின் யாழ்ப்பாண அத்தியட்சகர் வண. கலாநிதி சு. ஜெபநேசன் விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சஞ்சிகையை வெளியிட்டு வைத்தார்.

அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தின் உப தலைவரும் சுன்னாகம் லயன்ஸ் கழகத் தலைவருமான த. நல்லதம்பி மேற்படி நூலின் முதற் பிரதியைப் பெற்றுக் கொண்டார்.

நூலின் அறிமுக உரையினை யாழ்ப்பாண மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் த. சிவலோகநாதன் நிகழ்த்தினார்.

(ஐ-152)

# கண்ணீர் அஞ்சலி

திருமதி
## வள்ளியம்மை அருணாசலம்

எமது கழக நலன்விரும்பிகளுள் ஒருவரான
**திரு. அ. சோமசுந்தரம்பிள்ளை**
(பட்டயக் கணக்காளர், துன்னாலை)
அவர்களின் அன்புத் தாயார்

காலமானதையிட்டு அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகம்.
வதிரி, கரவெட்டி

(கி - 4968)

# ஞானசாரியர் கல்லூரிக்கான விளையாட்டு மைதானம் அமைத்தல்

1992 ஆம் ஆண்டு மே மாதம் வயல் நிலத்தை விளையாட்டு மைதானம் அமைக்க போஷகருக்கு சம்மதம் தந்த வயல் உரிமையாளர் கடிதத்தின் பிரகாரமும் நில அளவையாளரின் 408 ஆம் / இலக்க வரைபடத்தின் பிரகாரமும் கல்லூரியின் பழைய மாணவர் நலன்விரும்பிகள் சங்கம் மேற்படி வயல் நிலத்தை சுற்றிவர மதிலமைப்பதாக 1998 - 08 - 16 இல் தீர்மானித்துள்ளனர்.

இவற்றுக்கு ஏதாவது ஆட்சேபனை இருப்பின் அதனை 14 நாள்களுக்குள்
போஷகர் வீ. அருளானந்தத்திற்கு
அறிவிக்குமாறு அன்புடன் வேண்டப்படுகின்றனர்.

தலைவர்,
ஞானசாரியர் கல்லூரி,
பழைய மாணவர்
நலன் விரும்பிகள் சங்கம்.

கரவெட்டி.
1998 - 09 - 25

(59381)

# முதலாம் ஆண்டு நினைவலைகள்



செல்வன்
## இரத்தினம் ஞானரூபன்
(மாணவன், யா/ அச்சுவேலி ம. வி.)

அன்னையின் மடியில்
02 - 01 - 1980

ஆண்டவன் அடியில்
06 - 10 - 1997

திதி: 24 - 09 - 1998

எம் அன்புச் செல்வமே! எம் அருமை மகனே! எங்கே சென்றாய்? புத்தூர் என்னும் பதியினிலே அவதரித்த என் மகனே! எம்மை விட்டு எங்கே சென்றாய்? அதிகாலையிலே உனது பேச்சினிலே என் அருமை மகனே எங்கே சென்றாய்? அம்மா, அப்பா என்று அழைப்பாயடா என் மகனே இனி அழைப்பு எம் செவிக்கு கேட்குமோடா? எம் செல்வமே கேட்குமோடா?

எம் அருமைத் தம்பி! ரூபனே எங்களை விட்டு எங்கே சென்றாய்? தரணியிலே ஐவரில் ஒருவரானாக இருந்தாயடா இப்போ தனிமையாக்கி நால்வராக்கி விட்டு எங்கே சென்றாய்? உனது பேச்சினிலே மனம் மகிழ வைக்கும் எம் அருமைச் சகோதரா எங்கே சென்றாய்? உனது விகடமான பேச்சை எப்போ கேட்போமடா? கருங்கல்லிலே பொறிக்க வேண்டிய உன் வாழ்வை இறைவன் தண்ணீரிலே எழுத நினைத்தனனேயடா!

எம் ஆருயிர் நண்பனே ரூபன் - பள்ளிப் பருவ மதில் கற்க வந்த எம் நண்பா - பத்தாம் ஆண்டில் கல்வி கற்ற நீ - பல கலைகளையும் பெறுவாய் என நினைத்தோமடா, உன் வாழ்வு பாதியினிலே நின்று விட்டதடா நீ மறைந்த நாள்கள் ஒரு வருடாமகின்றதே ஆனாலும் உன் நினைவு மறையவில்லையடா. உனது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உன் பிரிவால் வாடும்:
அப்பா, அம்மா,
சகோதரர், அத்தான், மருமகன்
உற்றார், உறவினர், நண்பர்கள்.

க. இரத்தினம்,
இரத்தினா பேக்கரி,
அச்சுவேலி.

[59380]

# அரச ஊழியருக்கு ஆங்கிலப் பயிற்சி இம்முறை இல்லை

சுன்னாகம், செப். 24

வடக்கு- கிழக்கு மாகாணத்திலுள்ள அரச ஊழியர்களுக்காக நடத்தப்படும் ஆங்கில மொழிப் பயிற்சி நெறி இவ் வருடம் நடத்தப்படமாட்டாதென அறிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு- கிழக்கு மாகாண சபையின் முகாமைத்துவ அபிவிருத்திப் பயிற்சித் திணைக்களம் இப்பயிற்சி நெறியை நடத்தி வந்தது.

இவ்வாண்டு மேற்படி பயிற்சி நெறியை நடத்துவதற்கு மாகாண திறைசேரி நிதி ஒதுக்கீடு செய்யாததாலேயே பயிற்சிநெறி நடத்தப்பட மாட்டாது எனத் தெரியவருகிறது.

(ஐ-27)

# வீதி ஒழுங்கை மீறுவோர் மீது நடவடிக்கை

நெல்லியடி, செப். 24

பருத்தித்துறை நகர வீதிகளில் பக்கம்பக்கமாக சைக்கிள்களில் பயணஞ்செய்து போக்குவரத்துக்கு இடைஞ்சல் செய்பவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென்று, பருத்தித்துறை பொலீஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

இவ்விதம் நடந்து கொள்வதன் மூலம் வீதி விபத்துக்களும் உயிரிழப்புகளும் ஏற்படலாமென்றும், இதன் காரணமாகவே இவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-109)

# லயன்ஸ் கழகம் மானிப்பாய் (வட்டம்)

## கண் பரிசோதனை முகாம்

கண் வெண்விழி படலத்தினால் (CATARACT) பாதிக்கப்பட்டவர்களை அடையாளங்கண்டு அதை அகற்றும் சத்திர சிகிச்சையை மேற்கொள்ளுவதற்கான பரிசோதனையை நடத்துவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

பரிசோதனையை மேற்கொள்பவர்:

யாழ். போதனா வைத்தியசாலை
கண் சத்திர சிகிச்சை நிபுணர்
வைத்திய கலாநிதி
**எஸ். குகதாசன்**

இடம்: மானிப்பாய் இந்துக் கல்லூரி, மானிப்பாய்.

நாள்: 27 - 09 - 1998 (ஞாயிறு)

நேரம்: காலை 7-30 மணி (புதிய நேரம்)

இப்பரிசோதனை மூலம் பயன்பெற விரும்பும் 55 வயதிற்கு மேற்பட்ட வசதி குறைந்தவர்கள் 25-09 98 (வெள்ளி), 26-09-98 (சனி) ஆகிய தினங்களில் கழகத்தினால் மாலை 3 மணியிலிருந்து மானிப்பாய் இந்துக்கல்லூரியில் பதிவுகளை மேற்கொள்ளலாம். (சாவற்காடு, சங்குவேலி, சண்டிலிப்பாய் மக்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்)

| லயன் | லயன் |
|---|---|
| எஸ். எஸ். தங்கராஜா | ஏ. சி. செபநாயகம் |
| செயற்றிட்டத் தலைவர் | கழகத் தலைவர் |

சேவை பிரசுர உதவி:-

**தரன்ஸ் கட்டட ஒப்பந்தக்காரர்,**
இல. 153, ஜொன்னாலை வீதி,
மானிப்பாய்.

(சி-4964)

# புதிய சிங்கள வகுப்புகள் ஆரம்பம்

ஆசிரியர் திருமதி தேவராஜா (நீதிமன்ற மொழிபெயர்ப்பாளர்) அவர்களினால் இணுவில் கிழக்கு கே. கே. எஸ் வீதியில் நடத்தப்பட்டு வரும் சிங்கள வகுப்புகளில் புதிய வகுப்புகள் 28-09-1998 இல் ஆரம்பமாகவிருக்கின்றன. செவ்வாய், வியாழன், சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் மாலை 5 மணிக்கு வகுப்புகள் [illegible] நடைபெறும்.

(சி-4963)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## தேசியத் தற்கொலை!

நாட்டின் பாதுகாப்புச் செலவு உச்சாணிக் கொப்புக்கு ஏறிவிட்டது. உத்தேசமாக ஒதுக்கப்படும் நிதிக்கு மேலதிகமாக, முறைக்கு முறை குறைநிரப்புப் பிரேரணை மூலம் அதிக நிதி வழங்கப்படுகிறது. நாட்டின் பணப் பெட்டியில் இருந்து போருக்குக் கோடி கோடியாகப் காசு கறக்கப்படுகிறது!

அந்த வகையில் இந்த வருடச் செலவுக்கென மீண்டும் ஒரு தடவை நாடாளுமன்றத்தில் 1 200 கோடி ரூபாவுக்கு அனுமதி கோரப்பட்டிருக்கிறது. கணக்குப் பார்த்தால், இத்தோடு இந்த ஆண்டுக்குரிய பாதுகாப்புச் செலவு 6,000 கோடி ரூபாவாகும்.

சின்னஞ்சிறிய தீவான இலங்கையில் — அபிவிருத்தி அடைவதற்கு முயன்று கொண்டிருக்கும் இலங்கையில் - வருடாந்த வருமானத்தில் முப்பது சதவீதம் நாட்டைப் பேரழிவுப் பாதையில் இட்டுச் செல்லும் போருக்குச் செலவிடப்படுவது தேசியத் தற்கொலைக்கு ஒப்பானதாகும்.

ஆனால் நாட்டை ஆளும் தென்னிலங்கை அரசியல் தலைவர்களும், தமிழ் மக்களை அடக்குமுறைக்கு உட்படுத்தி இரண்டாந்தரப் பிரஜைகளாக வைத்திருக்க வேண்டும் என்று விரும்பும் இனத் தீவிரவாதிகளும் இந்தத் தேசியத் தற்கொலை குறித்து சிறிதும் கவலையற்றவர்களாகச் செயற்படுகிறார்கள்.

வடக்கு - கிழக்கில் நடைபெறும் போர், இனப்பிரச்சினையோடு சம்பந்தப்பட்டது. இனப்பிரச்சினைக்குப்போர் தீர்வல்ல என்றே நாட்டு மக்களில் 90 சதவீதத்துக்கும் மேற்பட்ட மக்கள் கருதுகின்றனர். அரசியல் தலைவர்களும் அரைத்த மாவை அரைப்பது போல அதனையே அடிக்கடி கூறிக்கொள்கின்றார்கள். ஆனால் படிப்பது தேவாரம் இடிப்பது சிவன் கோயில் என்பது போல போர் தொடரப்படுகிறது; அதற்குத் தேவையான பணத்தைக் கண்ணை மூடிக் கொண்டு அரச பணப் பெட்டியிலிருந்து இறைக்கிறது அரசு.

இனப்பிரச்சினைக்கு அரசியல் பேச்சு, சமாதானப் பேச்சுவார்த்தை என்றெல்லாம் அலங்காரமாகப் பேசும் ஆட்சித் தலைவர்கள், போரின் வெற்றியையே தமது வாக்கு வங்கியைப் பெருக்கும் சாதனமாகப் பயன்படுத்த இலக்கு வைக்கிறார்கள்!

சொல்லுக்கும் செயலுக்கும், நடிப்புக்கும் நடைமுறைக்கும் இடையே உள்ள இந்த முரண்பாடு இப்போது நீங்காது என்பதனை உறுதி செய்யும் விதத்திலேயே ஆண்டுக்கு ஆண்டு போர்ச் செலவு உயர உயர ஏறிச் செல்கிறது. பாதுகாப்பு நிதிக்கு அரசாங்கச் சேவையாளர் ஒருவாரச் சம்பளத்தை அன்பளிப்புச் செய்யவேண்டும் என்ற அழைப்பு அர்த்தமற்ற போருக்கான அநியாயச் செலவு மேலும் அதிகரிக்கும்; அளவு கணக்கற்றுப் போர் தீவிரமடையும்; வடக்கு — கிழக்கு அழிக்கப்படும், என்பனவற்றுக்கு கட்டியம் கூறுவதாக அமைகிறது. இந்தத் தேசியத் தற்கொலையைத் தடுத்து நிறுத்த எவருமில்லை என்ற பரிதாப நிலை...!

# குடாநாட்டு மாணவரின் கல்வித்தரம் குன்றுவதற்கு பிரதான காரணிகள்

இவ்வருடம் வெளியான க. பொ. த. சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகள் யாழ்ப்பாணத்தின் கல்வித் தரம் வீழ்ச்சி அடைந்ததை எடுத்துக் காட்டின. இதனை அவதானித்த ஆசிரியர்கள் அதிர்ச்சியடைந்தனர்; பெற்றோர் கவலையடைந்தனர்; கல்விமான்கள் கவலை தெரிவித்தனர். உதயன் பத்திரிகை இப்பெறுபேறுகளை உன்னிப்பாக நோக்கிக் கிராமப்புறப் பாடசாலைகளைவிட நகர்ப்புறப் பாடசாலைகளிலேயே அதிக வீழ்ச்சி காணப்படுவதைச் சுட்டிக் காட்டியது.

பெயர் பெற்ற தனியார் பாடசாலைகளையும் பெருந்தொகையான அரச பாடசாலைகளையும், தனியார் 'ரியூட்டரி'கள் பலவற்றையும் தன்னகத்தே கொண்டுள்ள யாழ்ப்பாணம் ஷெல் வீச்சு, விமானக் குண்டுவீச்சு போன்ற போர்ப் பயங்கரங்கள் நிலவிய காலத்திலும் கல்வித்தரத்தில் உயர்ந்தே நின்றது. ஆனால், போர் அனர்த்தங்கள் குறைந்துள்ள இக்காலத்தில் யாழ்ப்பாணத்தின் கல்வித்தரம் வீழ்ந்தது ஏன் என ஆராய வேண்டியது அவசியமாகிறது.

முன்பு திரைப்படங்கள் காட்டுதல், மதுபான விற்பனை போன்ற விடயங்களின் மீது மிக இறுக்கமான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்தன. இப்பொழுது இக்கட்டுப்பாடுகள் தளர்வடைந்துள்ளன. தியேட்டரிலும் மினி சினிமாக்களிலும் திரைப்படங்கள் காட்டப்படுகின்றன. மினிசினிமாக்கள், வகுப்புக்கள் நடைபெறும் நேரங்களிலும் படங்களைக் காட்டியதாலும், காட்டப்பட்ட படங்களில் இளைஞர் விரும்பும் பல காட்சிகள் இடம்பெற்றிருந்ததனாலும், பல மாணவர்கள் இப் படக்காட்சிகளுக்கே சென்றனர். ஒழுங்காக வகுப்புகளுக்குச் சமுகமளிக்கவில்லை. இதனால் அவர்களது கல்வி பாதிக்கப்பட்டு, பரீட்சைப் பெறுபேறுகளில் தொய்வு காணப்பட்டது எனப் பொதுவாகக் கூறப்படுகிறது.

மேலும், நகரங்களில் அடைக்கப்பட்ட பியர் போன்றவை பலசரக்குக் கடைகளிலும் தாராளமாக விற்கப்படுவதால் அவற்றை நுகரும் வாய்ப்பைப் பெற்ற மாணவர்கள், மதுவழிச் சென்று கல்வி வழியைத் தவற விட்டுவிட்டார்கள் எனவும் கூறப்படுகிறது.

### இரண்டு நாள் கெடும் கல்வி

நகரப் புறங்கள் மின்விநியோகத்தைப் பெற்றுள்ளன. இங்கு படிப்பதற்கு மின்சாரத்தைப் பயன்படுத்துவதைவிடத் தொலைக்காட்சி பார்ப்பதற்கே மின்சாரம் கூடுதலாகப் பயன்படுத்தப் படுவதை அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது. மேலும் இரவின் பெரும் பகுதியும் தொலைக்காட்சியில் படங்களையும், நாடகங்களையும் பார்த்தலிலேயே செலவிடப்படுவதையும் காணக் கூடியதாக இருக்கிறது. திரைப்படங்கள் நள்ளிரவுவரை நீண்டு செல்வதால் இவற்றைப் பார்க்கும் மாணவர்களின் கல்வி அந்த இர

## பல தரப்புகளினதும் சம்பந்தம் உண்டு

வில் மாத்திரமன்றி நித்திரை விழித்த அசதியால் மறுநாளும் கெடுகிறது.

மேலும், படங்களில் இடம்பெற்ற காட்சிகளை மனதில் சுமந்தபடி பாடசாலைக்குச் செல்லும் மாணவர்கள் அக்காட்சிகளைப்பற்றி வகுப்புகளில் விமர்சித்துக் கற்பித்தலுக்கு இடையூறு செய்து ஆசிரியர்களின் கற்பிக்கும் ஆர்வத்தையும் கெடுத்து விடுகின்றனர். இதனால் கற்பித்தலும் பாதிக்கப்படுகிறது.

நகர்ப்புறங்களில் 'ஜெனரேற்றர்', 'டெக்' திரைப்பட 'வீடியோ கசற்று'கள் போன்றவை தாராளமாக வாடகைக்கு விடப்படுகின்றன. இவற்றை வாடகைக்குப் பெற்று, ஒரே இரவில், ஒன்றன் பின் ஒன்றாகப் பல படங்களைப் பார்க்கும் வழக்கமும் இங்கு ஏற்பட்டுள்ளது. இவ்வாறு இரவு முழுவதும் கண் விழித்துப் பல படங்களைப் பார்ப்பதால் கண்களில் பாதிப்புஏற்பட்டு மாணவர்களின் கல்வி பாதிப்படைகிறது.

மேலும் இவ்வாறு இரவு முழுவதும் கண்விழித்த மாணவர்கள் மறுநாள் வகுப்புகளில் நித்திரையின் வசப்படும்போது, ஏனைய மாணவர்கள் அவர்கள் மீது பல்வேறு சேட்டைகளையும் செய்து துயிலெழுப்பி மகிழ்கின்றனர். இச்சேட்டைகளை ரசிக்கும் மாணவர்களின் சிரிப்பொலியினால் ஒரு வகுப்பு மட்டுமன்றி அயலிலுள்ள ஏனைய வகுப்புகளும் குழம்பி விடுகின்றன. இதனால் கற்றல், கற்பித்தல் இரண்டுமே பாதிப்பிற்குள்ளாகின்றன.

தொலைக்காட்சிப் பெட்டிகளில் அதிக ஒலி வெளிவரச் செய்து தொலைக்காட்சி பார்க்கும் வழக்கமும் நகரப் புறங்களில் தோன்றியுள்ளது. இந்த ஒலி தொலைக்காட்சி பார்க்கும் வீட்டுக்காரரின் பிள்ளைகளின் கல்வியை மாத்திரமன்றி, அயல் வீட்டுக்காரரின் கல்வியையும் பாதிக்கிறது. சிலர் அடுத்தவீட்டுப் பிள்ளைகள் சிறப்பாகக் கல்வி கற்பதைச் சகிக்கமுடியாமல்பொறாமை கொண்டு அவர்களது கல்வியைக்கெடுக்கவேண்டுமென்ற ஒவ்வாத எண்ணத்துடன் தொலைக்காட்சி, வானொலி ஒலிநாடாக்கள் போன்றவற்றின் சத்தத்தை அதிஉயர் அளவில் வைக்கின்றனர்.

இவ்வாறு ஒரு வீட்டிலுள்ள பிள்ளைகளின் கல்வியைக் கெடுப்பதற்கு என எழுப்பப்படும் ஒலி குறித்து ஒரு வீட்டிற்குள் மாத்திரமன்றி அயலிலுள்ள பல வீடுகளுக்குள்ளும் சென்று அயலவர் அனைவரதும் கல்விக்கு உலை வைத்துவிடுகின்றது.

### ஒலிபெருக்கிகள்

தெய்வபக்தி ஏற்படவேண்டும் என்பதற்காகக் கூம்பு வடிவ ஒலிபெருக்கிகள் மூலம் தேவாரபாராயணங்கள் இந்துக் கோயில்களில் ஒலிபரப்பப்படுகின்றன. அது அதிகாலையில் வீட்டிலிருந்த

**ச. ஆ கோபாலமூர்த்தி**

வாறு கல்விபயிலும் மாணவர்களது கல்விக்கும் இடையூறாக அமைகிறது. மேலும், முதியோர், நோயாளிகள் போன்றவர்களின் நித்திரையைக் கெடுத்து அவர்களது உடல்நலத்தையும் பாதித்து விடுகிறது.

### பாடசாலை வைபவங்கள்

பாடசாலைகளில் இடம்பெறும் பல்வேறு வைபவங்களுக்கான நீண்டகால ஆயத்த நடவடிக்கைகளும் மாணவர்கள் படிக்க வேண்டிய பாட வேளைகளை விழுங்கிவிடுகின்றன. நவராத்திரி தின நிகழ்வுகளுக்கென அத்தினங்களில் ஒரு பாட நேரத்தைப் பயன்படுத்தினால்பரவாயில்லை. ஆனால் சில பாடசாலைகளில் ஒன்பது நாள்களும், பல்வேறு நிகழ்ச்சிகளிலேயே செலவிடப்படுவதனால் ஒன்பது நாள் கல்வியிலும்நட்டம் ஏற்படுகிறது.

இதைத் தவிர்ப்பதற்குப் பாடசாலையின் பாடவேளைகள் முடிந்தபின் கலை நிகழ்ச்சிகளை நடத்தலாம். உடற்பயிற்சிப் போட்டி, விளையாட்டுப் போட்டி, தமிழ்த்தினவிழா, ஆங்கிலதினவிழா போன்றவற்றுக்குப் பயிற்சி அளிப்பதற்கும் பல நாள்களின் பல பாட வேளைகள் செலவிடப்படுகின்றன. இந்த ஆயத்த நடவடிக்கைகள் குறுகியனவாக அமையாததாலும் மாணவருக்குக் கல்வியில் நட்டம் ஏற்படுகிறது.

குளிர்மிகுந்த மேலைநாடுகளில், வருடங்களில் சில மாதங்கள் மாத்திரம் கிடைக்கும் சூரிய வெப்பத்தில் அதிக நேரம் நின்று அதனை அனுபவிக்க வாய்ப்பளிப்பதற்காக அறிமுகப்படுத்தப்பட்ட கிரிக்கெற் விளையாட்டு, வெப்பம் மிக்க யாழ்ப்பாணத்திற்கும் பரவி எங்கள் பிள்ளைகளைத் தன்வயப் படுத்தி விட்டது. கிரிக்கெற் பிரியர்களாகிவிட்ட எங்கள் பிள்ளைகள், கல்வி கற்க வேண்டிய நேரங்களில் மைதானங்களிலும், தொலைக்காட்சியிலும், கிரிக்கெற் ஆட்டங்களைப் பார்ப்பதாலும் அவர்களது கல்வி பாதிப்பிற்குள்ளாகிறது.

### ரியூசன் எல்லோருக்கும் தேவையா?

கிரகிக்கும் திறன்மிக்க மாணவர்களும் இருக்கிறார்கள். கிரகிக்கும் திறன் குறைந்த மாணவர்களும் இருக்கிறார்கள். கிரகிக்கும் திறன் குறைந்த மாணவர்களுக்கு மேலதிக 'ரியூசன்' தேவைப்படும். ஆனால் கிரகிக்கும் திறன்மிக்க மாணவர்கள் பாடசாலைகளில் கற்பிக்கப்பட்ட பாடங்களை மீட்டல் செய்து நினைவில் இருத்துவதே அவர்களுக்குப் போதுமானதாக இருக்கும். இவர்களுக்கு ''ரியூசன்'' வகுப்புக்கள் எதுவும் தேவையில்லை. இவர்கள் ''ரியூசன்'' வகுப்புக்களுக்குச் செல்வதால் பாதகமான விளைவுகள் தான் ஏற்படும்.

ஆனால் இவர்களது பெற்றோரும் ஏனைய பிள்ளைகளைப் போல தமது பிள்

(8 ஆம் பக்கம் பார்க்க)

# சாயி சிந்தனை

பாலில் இருக்கும் வெண்ணெய் கண்ணுக்குத் தெரிவதில்லை. ஆனால் வெண்ணெய் இருக்கிறது. பாலின் ஒவ்வொரு துளியிலும் வெண்ணெய் உண்டு. ஆனால், அதை எப்படிக் காண்பது? செய்ய வேண்டிய கடமைகளைச் செய்தால் காணலாம். பாலைத் தயிராக்கிக் கடையும் போது, நிறைந்துள்ள வெண்ணெய் மொத்தமும் திரண்டுவரும்.

உன் இதயமே பாத்திரம். அதில் இருக்கும் அன்பு என்பது பால் இந்த அன்பை இறைவனுக்கு அமர்ப்பணம் செய்வதே கடைவது என்கிற 'Process' (வழிமுறை). அப்போதே சாட்சாத்காரம் என்கிற வெண்ணெய் திரண்டு வருகிறது. கடவுள் இல்லாத இடம் இல்லை. பாலில் வெண்ணெய் இருப்பதுபோல், ஆனால் கண்ணுக்குத் தென்படுவதில்லை. எப்போது கண்ணுக்குத் தென்படுவார்? அதற்கான முயற்சிகளைச் செய்யும்போது நிச்சயம் காணமுடியும்.

ஆதாரம்: [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏழாலையில் குளம் புனரமைப்பு

சுன்னாகம், செப். 24

ஏழாலை பெரியதம்பிரான் குளம ஏழாலை விவசாய மக்களால் திருத்தம் செய்யப் பட்டு வருகிறது.

உலகஉணவுத் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட வேலைத் திட்டங்களில் எஞ்சிய மனித வலுவைப் பயன்படுத்தி இத் திருத்த வேலை மேற்கொள்ளப் பட்டுவருகிறது.

இதேவேளை—

இதே அடிப்படையில் அளவெட்டி விவசாய சம்மேளனம் அம்பனை வாய்க்கால் திருத்த வேலையில் ஈடுபட்டுள்ளது. வேலையில் பங்குபற்றும் ஒவ்வொருவருக்கும்- ஒரு மனித வலு என்ற அடிப்படையில் - உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்படுகின்றன.

(ஐ-27)

## நாளை

புரட்டாதி - 09

வெள்ளிக்கிழமை

திதி: பஞ்சமி
முழுநாளும்

நட்சத்திரம்: விசாகம்
முன்னிரவு 09.27 வரை.

சுபநேரம்: 06.02 - 07.32

ராகுகாலம்: 10.32 12.02

(பகலுக்கும் இரவுக்கும் பழையநேரப்படி)

## உதயவாக்கு

உயர்வு தாழ்வு கற்பிக்காமலிருந்தால் எத்தனை வேறுபாடுகள் இருந்தாலும் நாம் கவலைப்பட வேண்டியதில்லை.

- ராஜாஜி

எழுதுமட்டுவாள் பகுதியில் உள்ள

# வயல்நிலங்களிலிருந்து மேலதிக நீரை வெளியேற்றும் வாய்க்காலை திறக்குக

## விவசாய சம்மேளனம் கோரிக்கை

யாழ்ப்பாணம், செப். 24

எழுதுமட்டுவாள் பகுதியிலுள்ள வயல் நிலங்களில் பயிர்ச்செய்கையின் போது வெளியேற்றப்படும் மேலதிக நீரை கடலுக்குள் எடுத்துச் செல்லும் வாய்க்காலினை திறந்துவிடுமாறு கோரி எழுதுமட்டுவாள் விவசாய சம்மேளனம் சாவகச்சேரி பிரதேச செயலருக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

குஞ்சு விழுபனை, விழுபளை, ஒட்டுவெளி, செட்டி கேணி, உசன், விடத்தற்பளை, சம்பாவெளி, சாளம்பை ஆகிய பகுதிகளில் சுமார் 850 ஏக்கர் விவசாய நிலப்பரப்பு உள்ளது. இந்த விவசாய நிலப்பரப்பில் பயிர்ச்செய்கைக் காலங்களில் வெளியேற்றப்படும் மேலதிக நீர் வாய்க்கால் மூலம் வெளியேற்றப்படுகிறது.

எழுதுமட்டுவாள் சந்தியில் இருந்து ஒட்டுவெளியூடாக செல்லும் வாய்க்கால் எழுதுமட்டுவாள் — நாகர்கோவில் வீதியைக் குறுக்கிட்டுச் செல்கின்றது. அந்த இடத்தில் வீதியின் இரு பக்கங்களிலும் படையினரால் சுமார் 100 மீற்றர் அளவில் மண் அரண் அமைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அமைக்கப்பட்டுள்ள மண் அரண் காரணமாக வாய்க்கால் ஊடாகச் செல்லும் நீர் இடை நடுவில் தடைப்பட்டு விடும். காலபோகப் பயிர்ச்செய்கை ஆரம்பித்துக் கொண்டிருப்பதனால் இந்த வாய்க்கால் திறந்து விட வேண்டியது அவசியமாகும். அவ்வாறு திறந்து விடப்படாவிட்டால் வயல் நிலங்களில் இருந்து வெளியேறுகின்ற மேலதிக நீர் பயிர்களை நாசம் செய்து விடும். அதனுடன் அப்பிரதேசத்தில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு மக்கள் குடிபெயர வேண்டிய நிலை கூட ஏற்படலாம். எனவே இந்த வாய்க்காலைத் திறந்து விடுவதற்கு உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

என்று அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

[ஐ 9]

# செய்திக் கொத்து

### நாகதம்பிரான் ஆலய உற்சவம்

வடமராட்சி, செப். 24

சரித்திரப் பிரசித்தி பெற்ற நாகர்கோயில் நாகதம்பிரான் ஆலயத்தின் அதிசிறப்பு உற்சவமான கப்பல் திருவிழா அடுத்த மாதம் 6 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இவ்வாலயத்தின் வருடாந்த அலங்கார உற்சவம் இம்மாதம் 30 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி அடுத்த மாதம் 9 ஆம் திகதி கடல் தீர்த்தத்துடன் முடிவடையும். (ஐ-173)

### தென்னங்கன்று விநியோகம்

நெல்லியடி, செப். 24

வடமராட்சிப் பகுதியிலுள்ள குடியிருப்பாளர்களின் நலன் கருதி, பருத்தித்துறை பிரதேச செயலகம், தென்னங்கன்றுகளை விற்பனை செய்யவுள்ளது.

தென்னை அபிவிருத்திச் சபையிடமிருந்து மானிய விலையில் பெறப்படும் சுமார் அறுநூறு தென்னங்கன்றுகளே அடுத்த வாரத்திலிருந்து விற்பனை செய்யப்படவிருப்பதாக, பருத்தித்துறை பிரதேச செயலக திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (ஐ-109)

### பற்றுச்சீட்டு பரிசீலிப்பு

யாழ்ப்பாணம், செப். 24

மின்தடை குறித்து முறைப்பாடு செய்யப் போகும் பாவனையாளர்கள் தம்முடன் மின் கட்டணம் செலுத்தியதற்கான பற்றுச் சீட்டையும் எடுத்துவர வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நடைமுறை தற்போது யாழ். அரசடி வீதியில் இருக்கும் யாழ். பிரதேச மின் அத்தியட்சகர் பணிமனையில் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது. (ஐ-4)

### மானிப்பாய் வீதி புனரமைப்பு

வலிகாமம்தெற்கு, செப். 24

மருதனார் மடத்திலிருந்து மானிப்பாய் செல்லும் பிரதான வீதி செப்பனிடப்பட்டு வருகிறது.

பெருந்தெருக்கள் திணைக்களத்தினரால் மேற்படி வீதியில் காணப்படுகின்ற பள்ளங்கள், குண்டு குழிகள் யாவும் நிரப்பப்பட்டு, தார் ஊற்றப்பட்டு வீதி புனரமைப்புச் செய்யப்பட்டு வருகிறது. (ஐ-152)

### நவராத்திரிப் போட்டிகள்

யாழ்ப்பாணம், செப். 24

யாழ். மத்திய கல்லூரி இந்துமாமன்றம் நவராத்திரி தினத்தை முன்னிட்டு கல்லூரி மாணவர்களிடையே கட்டுரை, கவிதை மற்றும் பண்ணிசை, கோலம் போடுதல், தோரணம் பின்னுதல் போட்டிகளை நடத்தவுள்ளது,

போட்டிகளில் வெற்றி பெறும் மாணவர்களுக்கு பெறுமதி மிக்க பரிசில்கள் வழங்கப்படும் என கல்லூரி இந்துமாமன்றப் பொறுப்பாசிரியர் ஞான. திருக்கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார். (ஐ-7)

### அரச அதிபர் பணிமனையில் சிற்றுண்டிச்சாலை

சுன்னாகம், செப். 24

அளவெட்டி, மல்லாகம் பல நோக்குக்கூட்டுறவுச் சங்கம் பொதுமக்களின் நன்மை கருதி தெல்லிப்பழை உதவி அரச அதிபர் பணிமனையில் சிற்றுண்டிச்சாலையொன்றை அமைத்துள்ளது. (இ-27)

### பட்டம் வழங்கி கௌரவிப்பு

தென்மராட்சி, செப். 24

அளவெட்டி ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தான திருக்கல்யாண உற்சவத்தில் பக்திப் பாடல்களைப் பாடிய எழுதுமட்டுவாளைச் சேர்ந்த சுப்பிரமணியம் ஸ்ரீபரன் என்னும் சிறுவனுக்கு 'தேனிசைச் செல்வன்' என்னும் பட்டம் வழங்கப்பட்டது. ஆலயத்தில் அண்மையில நடைபெற்ற விழாவொன்றில் அருட்கவி சீ. விநாசித்தம்பி இப்பட்டத்தை வழங்கினார். (ஐ-117)

### திருவடி நிலை கடலில் தீர்த்தம்

சுழிபுரம், செப். 24

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலய தீர்த்தத்திருவிழா சுழிபுரம் திருவடி நிலைக் கடலில் கடந்த ஞாயிறன்று பக்தி பூர்வமாக நடைபெற்றது. பல்நூற்றுக்கணக்கான மக்கள் பொன்னாலையில் இருந்து சுழிபுரம் திருவடி நிலை கடலில் தீர்த்தம் ஆடுவதற்க்காக சுவாமி எழுந்தருளிய மஞ்சத்துடன் சென்றனர். சுமார் மூன்று மைல்தூரத்தை பக்தர்கள் நடந்து சென்றனர். (ஐ-82)

## ஊனமுற்றோர் தினத்துக்கான ஏற்பாடு

சுன்னாகம், செப். 24

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் சர்வதேச ஊனமுற்றோர் தினத்தைக் கொண்டாட மாகாண சமூக சேவைத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

பிரதேச மட்டத்தில் இத் தினத்தைக் கொண்டாட நடவடிக்கை எடுக்குமாறு மாகாண சமூக சேவைப் பணிப்பாளர் க. சிவசிதம்பரம் பிரதேச செயலக சமூக சேவை உத்தியோகஸ்தர்களுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

ஊனமுற்றோர் பற்றிய விழிப்புணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்தக் கூடியதாக நிகழ்ச்சிகள் நடத்தப்பட வேண்டுமெனவும்—

இதற்கு அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியையும் பெற்றுக்கொள்ளலாமெனவும் அவர் தனது பணிப்புரையில் குறிப்பிட்டுள்ளார்.

ஒவ்வோராண்டும் டிசம்பர் 3 ஆம் திகதி சர்வதேச ஊனமுற்றோர் தினம் கொண்டாடப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

(ஐ-27)

## சிறார்களுக்கு அன்பளிப்பு

யாழ்ப்பாணம், செப். 24

தேசிய சேமிப்பு வங்கியின் யாழ். கிளையின் 25 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு மேற்படி வங்கியின் நலன்புரிச் சங்கத்தினர் 50 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்களை அநாதைச் சிறார்களுக்கு அன்பளிப்புச் செய்தனர்.

இதில் 25 ஆயிரம் ரூபா பெறுமதியான சீருடைகள் அண்மையில் கைதடி நவீல்ட் பாடசாலை சிறார்களுக்கும், 25 ஆயிரம் ரூபா பெறுமதியான சூட்கேஸ் மற்றும் பாவாடை, சட்டைகள் தெல்லிப்பழை துர்க்கா மகளிர் இல்ல மாணவிகளுக்கும் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளன.

(ஐ-4)

# பழுதடைந்த ரின்மீன் குறித்து முறைப்பாடு

வலிகாமம் தெற்கு, செப். 24

குளங்கள் புனரமைப்புப் பணிகளில் ஈடுபடுவோருக்கு வழங்கப்படும் உலர் உணவுப் பொருள்களில் சில பாவனைக்குதவாத பழுதடைந்த பொருள்களாகக் காணப்படுவதாக முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

உலக உணவு ஸ்தாபனத்தின் அனுசரணையுடன், யாழ்ப்பாண மாவட்ட கமத்தொழில் திணைக்களத்தினால் யாழ்ப்பாணக்குடாநாட்டிலுள்ள பல குளங்கள் தற்போது புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றன.

ஒவ்வொரு பிரதேசங்களிலும் உள்ள விவசாய சம்மேளனங்களினூடாகவும் இப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

குளங்கள் புனரமைக்கும் பணிகளில் ஈடுபடும் மக்களுக்கு நிவாரண ஊக்குவிப்பாக அரிசி, சீனி, மா, பருப்பு, ரின்மீன் போன்ற உலர் உணவுப்பொருள்கள் வழங்கப்பட்டும் வருகின்றன.

இப்பொருள்களுள் ரின்மீன் வகைகளே இவ்வாறு பழுதடைந்து பாவனைக்குதவாதன வாக இருப்பதாக மக்கள் முறைப்பட்டுள்ளார்கள்.

இது விடயம் தொடர்பாக விவசாய சம்மேளனத் தலைவர்கள் சிலரிடம் கேட்டபோது — தமக்கு வழங்கப்படும் பல ரின்மீன் பெட்டிகளுள் ஒரு சில பெட்டிகளில் இவ்வாறு பழுதடைந்த மீன் ரின்கள் காணப்பட்டதாகவும்—

இது பற்றி தாம் சம்பந்தப்பட்ட கமத்தொழில் கேந்திர நிலைய அதிகாரிகளிடம் ஏற்கனவே அறிவித்துள்ளதாகவும் தெரிவித்தனர். (ஐ-152)

## சித்திரப் போட்டி

யாழ்ப்பாணம், செப். 24

தெல்லிப்பழை, சண்டிலிப்பாய், சங்கானை, உடுவில் கோட்டப் பாடசாலை மாணவர்களுக்கு இடையேயான ''சமாதானத்திற்கான சிறுவர் சித்திரப் போட்டி'' 513 ஆவது படையணியின் அனுசரணையுடன் இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு மருதனார் மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் வலயம் இரண்டின் கல்விப் பணிப்பாளர் சி. சிவராஜா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (ஐ-ரீ)

## மெய்வல்லுநர் போட்டி

எழுதுமட்டுவாள் ஸ்ரீ கணேசா பாலர் பாடசாலை சிறார்களின் மெய்வன்மைப் போட்டிகள் எதிர்வரும் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பாடசாலை முன்றலில் டாக்டர் கு. கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெறும்.

முதன்மை விருந்தினராக சாவகச்சேரி பிரதேச சபைத் தலைவர் அன்ரன் பொன்னையாவும், சிறப்பு விருந்தினராக எழுதுமட்டுவாள் கிராம அலுவலர் பொ. நவரத்தினராசாவும் கலந்து கொள்வர்.

(ஐ-117)

# சாவகச்சேரி நகரப் பகுதிக் கடைகளில் திடீர்சோதனை

## பழுதான பொருள்கள் மீட்பு

தென்மராட்சி, செப். 24

சாவகச்சேரி நகரப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்கள், சந்தை ஆகியவற்றில் நேற்று முன்தினம் காலை சுகாதாரத் திணைக்கள திடீர்ப் பரிசோதனைக்குழுவினர் உணவுப்பொருள்கள் மீது சோதனை நடத்தினர். பெருமளவு காலாவதியான உணவுப் பொருள்களும் பழுதடைந்த மரக்கறி வகைகளும் கண்டு பிடிக்கப்பட்டு எடுத்துச் செல்லப்பட்டன.

காலாவதியான தேயிலை பைக்கற், கோப்பி, மேசை உப்பு, மாமைற், மீன்ரின், பிஸ்கட், பால்மா (லக்டோஜன்), பைக்கற் உப்பு உட்பட பல பொருள்களும், பழுதடைந்த உருளைக்கிழங்கு, பூசணி, கத்தரிக்காய் ஆகியனவுமே பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

சாவகச்சேரி நகர பொதுச் சுகாதாரப் பரிசோதகர் து. கிளின்டஸ் தலைமையிலான பயிலுநர் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் இப்பரிசோதனையில் ஈடுபட்டனர்.

(ஐ-117)

# குடாநாட்டு மாணவரின்...

(ஏழாம் பக்கத் தொடர்)

ளைகளும் 'ரியூசன்' வகுப்புகளுக்குச் செல்லாவிடில், அவர்களது அந்தஸ்துக் குறைந்துவிடும் என எண்ணி இவர்களையும் ''ரியூசனுக்கு'' அனுப்புகிறார்கள். பாடசாலையில் பாடங்களை நன்கு கிரகித்துக் கொண்ட இவர்கள் அதே பாடங்கள் ''ரியூசன்'' வகுப்பில் படிப்பிக்கப்படும் போது ஆர்வமற்றும், சலிப்படைந்தும் பக்கத்திலிருக்கும் மாணவர்களைச் சீண்டுவார்கள். இதனால் சண்டைகள் கூட ஏற்படலாம்.

மேலும் ''ரியூட்டரிகள்'' தமக்குத் தேவையான பாடங்களை மாத்திரம் அங்கு படிக்க மாணவர்களுக்கு இடமளிக்காது எல்லாப் பாடங்களையும் படிக்க வேண்டுமென்று நிர்ப்பந்திப்பதாலும், ஓய்வு, விளையாட்டுப் போன்றவற்றுக்கான நேரமும் ரியூட்டரிகளிலேயே செலவிடப்படுவதாலும் மாணவர்களுக்கு அலுப்பும், விரக்தியும் ஏற்படுவதுடன் உளரீதியான பாதிப்பும் ஏற்பட்டுக் கல்வித்தரம் வீழ்ச்சி காண்கிறது.

ஆறுகள் எதுவுமின்றி வரண்ட பூமியாக, பிரதேசமாக, வானம்பார்த்த பூமியாக இருக்கும் யாழ்ப்பாணத்தின் சொத்து கல்வியேயாகும். விளையாட்டுகளில் ஏற்பட்ட அதீத மோகம், அந்தஸ்திற்காக 'ரியூசன்' வகுப்புகளுக்குச் செல்லல், அந்தஸ்துச் சின்னமாக (Status Symbol) மாறிவிட்ட ஆடம்பர வைபவங்கள், பாடசாலைகளுக்கு அவசியமான வைபவங்களுக்குப் பிள்ளைகளைத் தயார் செய்வதற்கு அதிக காலம் செலவிடல், மதுவினால் மதிமயங்குதல், ஒரே இரவில் பல திரைப் படங்களைப் பார்ப்பதற்காகக் கண் விழித்தல், பொறாமை போன்றவை எமது பிரதேசத்தின் கல்விப் பயிரை அழித்துவிடாது பாதுகாக்க வேண்டியது எங்கள் அனைவரதும் கடமையாகும்.

நீர் கலந்த பாலிலிருந்து அன்னம் பாலைப் பிரித்துப் பருகுவது போலத் தொலைக்காட்சியில் மாணவருக்குப் பயன்தரும் கல்வி நிகழ்ச்சிகளும், மாணவர்களது கவனத்தை வேறு திசையில் திருப்பும் நிகழ்ச்சிகளும் ஒளிபரப்பப்படும்போது மாணவர்கள் பயன்தரும் கல்வி நிகழ்ச்சிகளையே பார்த்துப் படித்து யாழ்ப்பாணத்தின் கல்வித்தரத்தை உயர்த்துவார்களாக. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "வாதுவ" கப்பல் மூலம் வடக்குக்கு

# கொழும்பில் இருந்து தேங்காய்

## 18 ஆயிரம் காய்கள் வந்தன

பருத்தித்துறைக்கு வந்து சேர்ந்துள்ள "வாதுவ" கப்பலில் 18 ஆயிரத்து 400 தேங்காய்கள் கொழும்பிலிருந்து எடுத்து வரப்பட்டுள்ளன.

தனியார் துறையினரால் முதல் தடவையாக கப்பலில் தேங்காய்கள் கொண்டு வரப்பட்டுள்ளன.

யாழ். மாவட்டத்துக்கு போதியளவு தேங்காய்களை தொடர்ந்து எடுத்து வருவதற்கு ஏற்பாடாகி உள்ளது. யாழ்ப்பாணத்தில் அதிகரித்து வரும் தேங்காயின் விலை கொழும்பில் இருந்து தேங்காய்கள் எடுத்துவரப்படுவதையடுத்து வீழ்ச்சியடையலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

"வாதுவ" கப்பலில் தேங்காய்களுடன் தனியார் துறையினருக்கு ஓட்டோக்கள், மோட்டார் சைக்கிள், லான்ட்மாஸ்டர்கள், உழவியந்திரங்களும் எடுத்து வரப்பட்டுள்ளன.

இதே வேளை—'மாஹோ', 'ஹெந்தல' உட்பட மூன்று கப்பல்கள் கொழும்புத் துறைமுகத்தில் யாழ்ப்பாணத்திற்குத் தேவையான பொருள்களை ஏற்றிக் கொண்டிருப்பதாக தெரிவிக்கப் படுகிறது.

இக் கப்பல்களில் சிமெந்து, கம்பிகள், சீற்றுக்கள் உட்பட அத்தியாவசிய உணவுப் பொருள்கள் ஏற்றப்பட்டு வருகின்றன. (ஐ-7-8)

# நெசவுப் பயிற்சியாளருக்கு கொடுப்பனவு அதிகரிப்பு

சுன்னாகம், செப். 24

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் பிரதேச செயலகங்களின் கீழ் செயற்படும் புடைவை நெசவு நிலையங்களில் பயிற்சியில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு வழங்கப்படும் அலவன்ஸ் 50 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதற்கான அனுமதியை மாகாண ஆளுநர் வழங்கியுள்ளார்.

இதுவரை 30 ரூபாவாக வழங்கப்பட்டு வந்த இக் கொடுப்பனவு இம்மாதம் முதலாந்திகதியிலிருந்து 20 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளதாகமாகாண தொழிற்றுறைத் திணைக்களப்பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

பயிற்சி நடைபெறும் ஒரு நாளுக்கு 30 ரூபாவைக் காசாக வழங்கி, மிகுதி 20 ரூபாவை பயிற்சியாளர் பெயரில் அண்மையில் உள்ள வங்கியொன்றில் சேமிப்புக் கணக்கில் வைப்பில் இடுமாறும்— 6 மாத பயிற்சி முடிவில் பாஸ் புத்தகத்தை அவர்களிடம் வழங்குமாறும் அவர் மேலும் அறிவித்துள்ளார். (ஐ-27)

# நஞ்சருந்திய நிலையில் ஒருவரின் சடலம் மீட்பு

யாழ்ப்பாணம். செப். 24

இணுவில் ரயில் நிலைய ஒழுங்கையில் நஞ்சருந்திய நிலையில் இறந்து கிடந்த ஒருவரின் சடலம் சுன்னாகம் பொலிஸாரினால் மீட்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்று ஒப்படைக்கப்பட்டது.

இது தொடர்பாக மல்லாகம் மாவட்ட நீதிமன்றுக்கு சுன்னாகம் பொலிஸாரினால் அறிவிக்கப்பட்டதையடுத்து மேற்படி நீதிமன்ற பதில் நீதிவான் க. அரியநாயகம் சடலத்தைப் பார்வையிட்டார்.

இறந்தவரினால்சுன்னாகம் பொலிஸாருக்கும், ஏழாலை மேற்கு கிராம சேவையாளருக்கும் எழுதப்பட்ட கடிதங்களும் சடலத்துடன் மீட்கப்பட்டு நீதிவானிடம் ஒப்படைக்கப்பட்டன.

இச்சடலத்தைப் பிரேத பரிசோதனை செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறும், இறந்தவரின் உறவினர் சடலத்தைப் பெறுவதற்கு முன்வந்தால் அவர்களிடம் ஒப்படைக்குமாறும் இல்லாவிட்டால் சடலத்தை அரச செலவில் அடக்கம் செய்யுமாறும் பதில் நீதிவான் உத்தரவிட்டார். ஏழாலை மேற்கு கிராம சேவையாளரை இன்று மன்றில் ஆஜராகுமாறும் அவர் அழைப்பாணை விடுத்தார்.

ஏழாலை மேற்குவாசியான கணபதிப்பிள்ளை மார்க்கண்டு (54 வயது) என்பவரே இவ்வாறு நஞ்சருந்தி தற்கொலை செய்து கொண்டவர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-5)

## சமய நிகழ்வில்

கொழும்புத்துறை, செப். 24

கொழும்புத்துறை கிழக்கு ஆனந்தம் வடலி வீதி புனித செபமாலை அன்னை ஆலய வருடாந்தத் திருவிழா நாளை வெள்ளிக்கிழமை மாலை 5-15 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும். எதிர்வரும் 3 ஆம் திகதி சனிக்கிழமை நற்கருணை ஆராதனையும், மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 6-00 மணிக்கு திருநாள் திருப்பலியும், அன்னையின் திருச்சொரூப ரதப் பவனியும் இடம் பெறும். (ஐ-30)

★ ★ ★

யாழ்ப்பாணம், செப். 24

நல்லூர் வடக்கு சந்திர சேகரப்பிள்ளையார் கோயிலில் இன்று காலை 7 மணி முதல் மாதாந்த சதுர்த்தித் திருவிழா நடைபெறும். பூசை, அபிஷேகத்தைத் தொடர்ந்து சுவாமி உள் வீதி வலம் வருவார். (ஐ)

★ ★ ★

யாழ்ப்பாணம், செப். 24

யாழ். போதனாவைத்தியசாலை புனித வேளாங்கண்ணி அன்னையின் வருடாந்த உற்சவம் இன்று மாலை 4.45 மணிக்கு கொடியேற்றம் மற்றும் ஆரம்ப வழிபாடுகளுடன் ஆரம்பமாகிறது.

தொடர்ந்து நான்கு நாள்கள் நடைபெறும் இந்த உற்சவத்தில் நாளை 25 ஆம் திகதி பணியாளர்களின் அர்ப்பணிப்பும், ஆழப்படுத்தலும், 26 ஆம் திகதி குணமாக்கல் வழிபாடும், நற்கருணை விழாவும், 27 ஆம் திகதி திருநாள் திருப்பலியும், அன்னையின் ஆசீரும் இடம்பெறும். (ஐ-15)

## தொலைபேசி இணைப்பு

வடமராட்சி, செப். 24

பருத்தித்துறை நகரசபை அலுவலகத்துக்கு தொலைபேசி இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

மந்திகையில் உள்ள தொலைபேசி பரிவர்த்தனை நிலையத்திலிருந்து இத் தொலைபேசி இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. (ஐ-173)

# அ'புரம் நீதிமன்ற உத்தரவின் பேரில் இளவாலை இளைஞர் கைதானார்

யாழ்ப்பாணம், செப். 24

அநுராதபுரம் நீதிமன்றத்தினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட இளைஞர் ஒருவரை காங்கேசன்துறை பொலிஸார் கைது செய்து நேற்று மல்லாகம் மாவட்ட நீதிமன்றில் பதில் நீதிவான் க. அரியநாயகம் முன்னிலையில் ஆஜர் செய்தனர்.

ஆர். ஜெயராஜ் (இளவாலை) என்ற இளைஞர் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்ட பின்னர் அநுராதபுரம் நீதிமன்றத்தினால் தவணை வழங்கப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டார்.

குறிக்கப்பட்ட தவணையில் அவர் நீதிமன்றுக்கு சமுகமளிக்காமையினால் மீண்டும் பிடியாணை பிறப்பிக்கப்பட்டது.

இந்த இளைஞரை அநுராதபுரம் நீதிமன்றுக்கு அனுப்பி வைக்குமாறுகோரிய பொலிஸாரின் வேண்டுகோளை ஏற்றுக் கொண்ட நீதிவான் இதற்கான உத்தரவைப் பிறப்பித்தார். (ஐ-5)

## நுண்கலைத்துறை பரீட்சை

யாழ்ப்பாணம், செப். 24

யாழ். பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைத் துறை இரண்டாம் ஆண்டு மாணவர்களுக்கான பரீட்சைகள் நாளை வெள்ளிக்கிழமை ஆரம்பமாகவுள்ளன.

இசைக்கலைமாணி, நாட்டியக் கலைமாணி, இசைமாணி, நாட்டியமாணி ஆகிய கற்கைநெறி மாணவர்களுக்கே நாளை காலை 9-30 மணி முதல் பரீட்சைகள் நடைபெறவுள்ளன. (ஐ-9)

## பதவி உயர்வு பரீட்சை

வடக்கு – கிழக்கு மாகாண இலங்கை தொழில் நுட்ப சேவையின் (படவரைஞர்) வகுப்பு I, வகுப்பு II 'அ'விற்கு பதவியுயர்வுக்கான திணைக்களப் பரீட்சைகள் நடத்தப்பட உள்ளன.

தகுதியுடையவர்கள் விண்ணப்பங்களை அடுத்த மாதம் 9 ஆம் திகதிக்கு முன் செயலாளர், மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு, வடக்கு கிழக்கு மாகாணம், திருகோணமலை என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவேண்டும்.

இது சம்பந்தமான அறிவுறுத்தல் சகல திணைக்களத் தலைவர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (இ-6)

# 95க்கு முன் ஓய்வுபெற்ற உள்ளூராட்சி ஊழியருக்கு கொடுப்பனவு இல்லை

தென்மராட்சி, செப். 24

உள்ளூராட்சி மன்றங்களில் பணியாற்றி கடந்த 1995 ஆம் ஆண்டுக்கு முன்னர் ஓய்வு பெற்ற யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த பலருக்கு இதுவரை ஓய்வூதியம் கிடைக்கவில்லை.

இந்த ஓய்வூதியர்களின் ஓய்வூதியக் கொடுப்பனவுகள் கொழும்பு உள்ளூராட்சி ஓய்வூதியத் திணைக்களத்திலாலேயே வழங்கப்பட வேண்டியதால் யாழ். மாவட்ட உள்ளூராட்சி மன்றங்கள் உரிய படிவங்களைக் கொழும்புக்கு அனுப்பியிருந்தன. படிவங்கள் அனுப்பப்பட்டு நான்கு வருடங்களுக்கு மேலாகியும் இதுவரை ஓய்வூதியமோ ஓய்வூதிய நன்கொடையோ கிடைக்கவில்லை எனப் பலரும் தெரிவித்துள்ளனர்.

1996 ஆம் ஆண்டுக்குப் பின்னர் உள்ளூராட்சி மன்றங்களில் கடமையாற்றி ஓய்வு பெறும் ஊழியர்களுக்கு அந்தந்த பிரதேச செயலக ஓய்வூதிய கிளை ஊடாக ஓய்வூதியம் வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது. (ஐ 117)

## கூட்டுறவு ஆணைக்குழு யாழ். வரும்

அரியாலை, செப். 24

திருகோணமலையில் உள்ள வடக்கு-கிழக்கு மாகாண கூட்டுறவு ஆணைக்குழுவினர் யாழ்ப்பாணத்திற்கு விரைவில் விஜயம் செய்யவுள்ளனர்.

யாழ். மாவட்டத்தில் கூட்டுறவு ஊழியர்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் மற்றும் தேவைகள் குறித்து கூட்டுறவு பிரதிநிதிகளுடனும் கூட்டுறவுப் அபிவிருத்து ஆணையாளருடனும் இக்குழுவினர் பேச்சு நடத்துவர். (ஐ-17)

## பெண் எழுத்தாளர் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், செப் 24

மகளிர் அபிவிருத்தி நிலையமும் பெண்கள் ஆய்வு நிறுவனமும் இணைந்து பெண் எழுத்தாளர்கள் பற்றிய ஆய்வுக் கலந்துரையாடல் ஒன்றை நடத்த உள்ளன.

இந்தக் கலந்துரையாடல் எதிர்வரும் திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு வண்ணார்பண்ணையிலுள்ள மகளிர் அபிவிருத்தி நிலையத்தில் நடைபெற உள்ளது.

இதில் கலந்து கொள்ள ஆர்வம் உள்ள பெண் எழுத்தாளர்களை அவர்கள் எழுதிய கதைகள், கட்டுரைகள், பிரசுரங்கள் ஆகியவற்றின் பிரதிகளுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஐ-9)

## விளையாட்டு நிகழ்வு

யாழ்ப்பாணம், செப். 24

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம் தமது கழக மைதானத்தில் நடத்தும் — ஏழுபேர் கொண்ட— உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

★ பிற்பகல் 4 மணி — சிவானந்தா 'ஏ' அணி எதிர் உதயதாரகை 'ஏ' அணி.

★ பிற்பகல் 5 மணி — டயமன்ஸ் 'ஏ' அணி எதிர் என். சி. சி. அணி. (இ-3)

## கொழும்பில் ஆறு. திருமுருகன் சொற்பொழிவு

கொழும்பு கொட்டாஞ்சேனை ஸ்ரீ வரதராஜ விநாயகர் கோயிலில் நவராத்திரி தினங்களில் சிறப்புச் சொற்பொழிவாற்றுவதற்காக யாழ். ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஆசிரியர் ஆறு. திருமுருகன் கொழும்பு வந்துள்ளார்.

ஆலய அறங்காவலர்கள் விடுத்த விசேட அழைப்பின் பேரில் கொழும்பு வந்துள்ள இவர் தினமும் மாலை 6-30 மணியிலிருந்து இரவு 8 30 மணிவரை ஆலய ஐங்கரன் மண்டபத்தில் சிறப்புச் சொற்பொழிவாற்றுகிறார்.

கடந்த திங்கட்கிழமை தொடக்கம் "விநாயக புராணம்" என்ற தலைப்பில் தொடர் சொற்பொழிவாற்றிவரும் ஆறு. திருமுருகன் இறுதித் தினமான விஜயதசமி அன்று "அகிலம் காக்கும் அன்னை பராசக்தி" என்ற தலைப்பில் விசேட சொற்பொழிவாற்றுவார். (ஐ 8)

## நோயாளர் எண்ணிக்கை அதிகரிப்பதால்

# பளை ஆஸ்பத்திரியை விஸ்தரித்து புதிய கட்டடம் அமைக்கக் கோரிக்கை

தென்மராட்சி, செப். 24

பளை அரசினர் வைத்தியசாலையில் சிகிச்சை பெறும் நோயாளர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப கட்டட வசதிகள் இல்லாததால் நோயாளர்கள் அனுபவிக்கும் கஷ்டங்களைக் குறைக்கும் வகையில் மேலதிக கட்டடங்கள் அமைக்க வேண்டி உள்ளது. ஆனால் ஆஸ்பத்திரி வளவில் போதிய இட வசதியில்லாததால் ஆஸ்பத்திரிக்கு முன்னால் உள்ள காணியைக் கொள்வனவு செய்யுமாறு வைத்தியசாலை அபிவிருத்திச் சபையினர் மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளரைக் கேட்டுள்ளனர்.

ஐம்பது வருடங்களுக்கு முன்னர் கட்டப்பட்ட இவ் வைத்தியசாலைக் கட்டடங்களில் அடிக்கடி பழுதுகள் ஏற்படுவதால் வருடா வருடம் இக் கட்டடங்களைத் திருத்துவதற்கு பெருமளவு நிதி செலவிடப்படுகிறது.

வைத்தியசாலையில் இரண்டு வார்ட்டுகளே உள்ளதால் அதிகரித்து வரும் நோயாளர்களை நிலத்தில் படுக்க வைக்க வேண்டிய நிலையில் உள்ளது. அத்துடன் [illegible] பிரசவ விடுதி ஒரு கிலோ மீற்றருக்கு அப்பால் உள்ளதால் அதனையும் வைத்தியசாலையின் அருகில் அமைக்க வேண்டி உள்ளது.

வெளிநோயாளர் பிரிவுக்கு தினமும் 300-க்கு மேற்பட்ட நோயாளர்கள் வருகை தருகின்ற போதிலும் இவர்கள் தற்காலிக கொட்டில ஒன்றிலேயே தங்க வேண்டியுள்ளது.

சகல வசதியும் கொண்ட வைத்தியசாலை அமைப்பதற்கு தற்போது வைத்தியசாலை அமைந்துள்ள இடம் போதுமானதாக உள்ளதால் காணியை சுவீகரிப்பதற்கு ஏற்ற நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அபிவிருத்திச் சபைத் தலைவர் தா. சுவாமிநாதன் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரின்ஸஸ்…

(முதலாம் பக்கத் தொடர்)

கும் இடையில் தொடர்பு இல்லை என்று இரகசியப் பொலீஸார் தெரிவித்ததை யடுத்து கொழும்புக் கோட்டை நீதிவான் ஐவரையும் நேற்று மாலை விடுதலை செய்தார். (இ-3-10)

## புலமை…

(முதலாம் பக்கத் தொடர்)

வெளிவருவது வழக்கம்.

பரீட்சையில் சித்தி அடையும் மாணவர்கள் பாடசாலைகளில் அனுமதி பெறுவதில் பிரச்சினைகளை எதிர் நோக்குவதால் பரீட்சை முடிவுகளை நேரத்துடன் வெளியிடுவதாக பரீட்சைத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-3)

## சந்திரிகா…

(முதலாம் பக்கத் தொடர்)

வாதத்தை ஒரு சர்வதேச பயங்கரவாத அமைப்பாக அமெரிக்கா பிரகடனப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தமைக்காக கிளின்ரனுக்கு நன்றி தெரிவித்ததாக கிளின்ரனுடனான சந்திப்பின் பின்னர் செய்தியாளர்களிடம் ஜனாதிபதி தெரிவித்தார்.

இலங்கையில் பயங்கரவாதத்தை தோற்கடிப்பதற்கு அமெரிக்கா ஆதரவு வழங்கும் என்று கிளின்ரன் தெரிவித்ததாகவும்—

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கு இலங்கை எடுத்துவரும் முயற்சிகளுக்கு கிளின்ரன் ஆதரவு அளித்தார் என்றும் - ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். (இ-6)

## யாழ்ப்பாணத்திலும்…

(முதலாம் பக்கத் தொடர்)

இச்சிறுவன் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார். (இ-3-135)

## 6 இலங்கையர்கள்…

(முதலாம் பக்கத் தொடர்)

தார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இவர்களால் பிலிப்பீன்ஸுக்குள் கொண்டுவரப்படும் சட்டவிரோத குடியேறிகள் அங்கிருந்து ஐரோப்பிய நாடுகளுக்கும் மற்றும் அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளுக்கும் அனுப்பப்படுவதாக பிலிப்பீனஸ் பொலீஸார் தெரிவித்தனர். (இ-9)

## அரசு..

(முதலாம் பக்கத் தொடர்)

பிரச்சினை உக்கிரமடைந்துள்ளது.

உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்தி அமைதியை உருவாக்கிவிட்டோம் என்று வெளி உலகுக்குக் காட்ட எடுத்த முயற்சிகள் அண்மையில் இரு மேயர்கள் கொலையுண்டதன் மூலம் தோல்வியடைந்து விட்டன.

கடந்த ஐ. தே. க ஆட்சியில் வெறுப்படைந்து பொதுமக்கள் ஐக்கிய முன்னணி ஆட்சிபீடம் ஏற ஒத்துழைத்த போது சமாதானம் குறித்து வைத்திருந்த நம்பிக்கை தற்போது சுக்குநூறாகிவிட்டது.

அரசின் அதிகாரப் பகிர்வு யோசனைக்குப் பெரும்பாலான தமிழ்மக்கள் ஆதரவு வழங்குகிறார்கள் என்று ஜனாதிபதி ஐ. நா. சபையில் கூறியுள்ளார்.

நாம் அரசுக்கு ஆதரவு வழங்கத்தான் இருந்தோம்; ஆனால் தற்சமயம் விரக்தியடைந்துள்ளோம். தீர்வைத் தருவார்கள், தருவார்கள் என்று நம்பி ஏமாந்த நிலையில் உள்ளோம். இப்படி அவர் கூறினார். (இ-3-10)

## பிரதேச சபைத்…

(முதலாம் பக்கத் தொடர்)

முன்னர் பயன்படுத்தப்பட்டு வந்த— கடந்த உள்ளூராட்சித் தேர்தலின் பின்னர் சாவகச்சேரி பிரதேச சபைத் தலைவர் பொன்னையா அன்ரனின் அலுவலகமாகவும் பாவிக்கப்பட்டுவருகின்ற— அலுவலகத்தில் நேற்று (செவ்வாய்) பிற்பகல் இடம்பெற்ற சம்பவத்துக்குப் பின்னர் சாவகச்சேரி பிரதேச சபைத் தலைவரும், பிரதேச சபை உறுப்பினர்கள் ஐவரும் காணாமல்போயுள்ளனர். மேலும் ஐந்து உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

காணாமற்போன அறுவர் குறித்தும் தகவல் இல்லாததால் இவர்களையும் இராணுவம் கைது செய்திருக்கலாம் என நம்புகிறோம்.

எமது உறுப்பினர்கள் சாவகச்சேரிக்குச் சென்ற நாள் தொடக்கம் அங்குள்ள இராணுவத்தினருக்கும் எமது உறுப்பினர்களுக்குமிடையே கசப்புணர்வுகளும், தர்க்கங்களும் ஏற்பட்டு வந்தன. இருப்பினும் மக்களின் நலன் கருதி எமது வேலைத்திட்டங்களை மேற்கொள்வதற்காக இராணுவத்தினரின் பிரச்சினை எதனையும் பொருட்படுத்தாது அவர்களைச் சமாளித்துக் கொண்டு வந்தோம்.

புதிதாக வந்த இராணுவத்தினர் இதனைப் புரிந்து கொள்ளாது எம்முடன் பிரச்சினைப்பட்டதனால் சிறு கைகலப்பு போன்ற சம்பவம் இடம்பெற்றது.

இதனைத் தீர்க்கும் முகமாக இராணுவ உயர் அதிகாரிகளான மேஜர் ஜெனரல் பலகல்ல, மேஜர் ஜெனரல் சூல செனவிரத்தின ஆகியோருடன் பேசி அவர்கள் பிரச்சினையை உணர்ந்து கொண்டதனால் பிரச்சினையை சுமுகமாகத் தீர்ப்பதற்கான இணக்கப்பாடு ஏற்பட்டுள்ளது.

இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை படையினரால் சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட செல்லன் தருபரூபன், எஸ். தமிழ்வாசன், எஸ். சிவசுந்தரம், பி. சுதாகரன், எஸ். யோகேந்திரன் ஆகியோர் சாவகச்சேரி பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (இ-3-31)

## சாவகச்சேரி…

(முதலாம் பக்கத் தொடர்)

பினர்கள் இதனை கவனத்தில் எடுத்ததாகத் தெரியவில்லை. அருகில் இருந்த தமது அலுவலகத்துக்கு புளொட் உறுப்பினர்கள் சென்று விட்டனர்.

இது குறித்து அப்பகுதி புளொட் தலைவர் அன்ரனிடம் படையினர் சென்று முறையிட விரும்பினர்.

இராணுவ வீரர் ஒருவர் புளொட் அலுவலகத்துக்குச் சென்று இது குறித்து அன்ரனிடம் தெரிவித்தார்,

அவரின் முறைப்பாட்டைக் கேட்ட அன்ரன் பின்னர் தனது சகாக்களையும் தம் அருகில் வரவழைத்துக் கொண்டு அந்த இராணுவ வீரரை எச்சரித்ததுடன் அந்த இடத்தை விட்டு அகன்று விடுமாறும் பயமுறுத்தினார். அவருக்கும் புளொட் உறுப்பினர்களுக்கும் இடையில் வாக்குவாதம் மூண்டது.

வாக்குவாதம் நடந்து கொண்டிருந்த சமயம் அன்ரன் துப்பாக்கி ஒன்றை எடுத்து அவரை நோக்கிச் சுட்டார்.

இந்த துப்பாக்கிச் சூட்டுச் சத்தத்தை கேட்டு அப்பகுதியில் கடமையில் இருந்த மற்றைய இராணுவ வீரரும் அங்கு வந்தார்.

அப்பொழுது அன்ரன் மற்றைய இராணுவ வீரரை நோக்கியும் சுட்டார்.

இந்தச் சம்பவத்தின் பின்னர் புளொட் உறுப்பினர்கள் தமது அலுவலகத்தை மூடிவிட்டு அங்கிருந்து அகன்று சென்றனர்.

சூடுபட்ட இரு இராணுவ வீரர்களில் ஒருவருக்குத் தலையில் பாரதூரமான காயம் ஏற்பட்டது. மற்றவர் சிறு காயத்துக்கு உள்ளானார்.

இந்தச் சம்பவத்தை அடுத்து, வெளியேறிச் சென்ற புளொட் உறுப்பினர்களைக் கண்டுபிடிப்பதற்காகப் படையினர் அப்பகுதியில் தேடுதல் நடவடிக்கை ஒன்றை ஆரம்பித்தனர். படையினர் தேடுதல் நடத்திய சமயம் மறைந்திருந்த அன்ரன் படையினரை நோக்கிச் சுட்டார். படையினர் சிறு ஆயுதங்கள் கொண்டு பதில் தாக்குதல் நடத்தினர். பின்னர் படையினர் அப்பகுதியில் சடலம் ஒன்றைக் கண்டுபிடித்தனர்.

அந்தச் சடலம் ஈ. பி. டி. பி. உறுப்பினருடையது என்று பின்னர் தெரியவந்தது.

படையினர் தொடர்ந்து தேடுதலில் ஈடுபட்டிருந்த போது கைவிடப்பட்டிருந்த வீடு ஒன்றிலிருந்து புளொட் உறுப்பினர் ஒருவர் கிரனேட் ஒன்றை வீச முற்பட்டார். படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். பின்னர் படையினர் அவரின் சடலத்தைக் கண்டு பிடித்தனர்.

வீதித் தடை ஒன்றில் மற்றும் இரு புளொட் உறுப்பினர்கள் சரண் அடைந்தனர். இவர்கள் கொடுத்த தகவலின் அடிப்படையில் அன்ரனால் மறைத்து வைக்கப்பட்டிருந்த, காயமடைந்த இரு இராணுவத்தினரினதும் ஆயுதங்கள் படையினரால் மீட்கப்பட்டன.

ஒரு ரி. 56 ரக துப்பாக்கி, ஒரு ரேடியோசெட், ஒரு கிரனேட் ஆகியவையும் புளொட் அலுவலகத்திலிருந்து படையினரால் கைப்பற்றப்பட்டன.

இந்தச் சம்பவங்களையடுத்து சாவகச்சேரி புளொட் அலுவலகம் படையினரால் மூடப்பட்டு சீல் வைக்கப்பட்டுள்ளது.

புளொட் அலுவலகத்தில் இடம்பெற்ற துப்பாக்கிப்பிரயோகத்தில் காயமடைந்த இரு இராணுவ வீரர்களும் பலாலி இராணுவ ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## இறந்த…

(முதலாம் பக்கத் தொடர்)

விக்கப்பட்டது. இவரது தாயார் சடலத்தை அடையாளம் காட்டினார்.

யாழ். ஆஸ்பத்திரிக்குச் சென்று இவரது சடலத்தைப் பார்வையிட்ட சாவகச்சேரி மாவட்ட நீதிவான் எஸ். ஏ. ஈ. ஏகநாதன் பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டார்.

சடலம் பிரேத பரிசோதனையின் பொருட்டு யாழ். ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டது.

அதே சமயம் நேற்று முன்தினம் இடம்பெற்ற கிளைமோர் குண்டு வெடிப்பு மற்றும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களை அடுத்து சாவகச்சேரிப் பகுதியில் நேற்றுச் சன நடமாட்டம் குறைந்து காணப்பட்டது.

காலை 10 மணிவரை நகரப் பகுதியில் மக்கள் நடமாட்டம் எதுவும் இருக்கவில்லை. பின்னர் சிறிது சிறிதாக மக்கள் வெளியே வரத் தொடங்கினர். (இ-31-15-5-139)


# அறிவித்தல்

இன்றிலிருந்து (24-09-98) Lion Air முகவர் பணியைத் தற்காலிகமாக நிறுத்தியுள்ளோம் என்பதை அறியத்தருகின்றோம்.

மார்க்கண்டு ஸ்ரோர்ஸ்

37, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (சி/4975)



# Institute of Informatics Studies

( Jaffna , Sri Lanka )

## தென்மராட்சி மாணவர்களுக்கு!

# Computer Courses

எமது நிறுவனத்தின் புதிய கிளை நிறுவனம் முன்னர் அறிவித்தபடி தென்மராட்சி மாணவர்களுக்காகத் தனது ஒப்பற்ற சேவையை 30-09-98 இல் இருந்து ஆரம்பிக்கவுள்ளது என்பதை மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.

★ 30-09-98 இல் ஆரம்பிக்கப்படவுள்ள பயிற்சி நெறிகளில் இணைகின்ற மாணவர்களுக்கு மட்டும் மொத்தக் கட்டணத்தில் 25% சலுகை.

★ இப்பயிற்சி நெறிகள் தொடர்பான விண்ணப்பப் படிவங்களையும், விவரங்களையும் 24-09-98 அன்று காலை 9-00 மணி முதல் 12-00 மணி வரை எமது சாவகச்சேரிக் கிளையில் பெற்றுக்கொள்ளலாம்.

சாவகச்சேரி கிளை நிறுவன முகவரி;

IIS,
நுணாவில் கிழக்கு,
கண்டி வீதி,
சாவகச்சேரி.

DIRECTOR,
I I S.

(சி/4972)



## எமது வீடியோ CD வெளியீடுகள்!

★ செந்தூரம் ( Pyramid )
★ கல்யாண கலாட்டா (Pyramid)
★ உன்னிடத்தில் என்னைக் கொடுத்தேன் ( Pyramid )

## ஓடியோ CD வெளியீடுகள்!

★ சனி பகவானே சரணம்
★ ஓம் ஸ்ரீ சாய் ராம்
★ வேப்பிலை வாசம்
★ நித்திய சாகரியின் பாடல்
★ சரவணன் சரணம்
★ திருப்பதி பாலாஜி
★ சகலகலாவல்லி மாலை
★ தேவி ஸ்தோத்திரம்
★ திருவேங்கட மகிமை

சுப்பஸோ வீடியோ

யாழ்ப்பாணம். (சி/4974)



## எமது வீடியோ CD வெளியீடுகள்!

★ The Peace maker
★ Face Off
★ Black Mask
★ Thunder Bolt
★ Who Am I?
★ Saving Private Ryan
★ Jackai
★ Most Wanted
★ Hit Man
★ Best of The Bast
★ Somethings Should Never Be
★ My Father is A Hero
★ Bleeders
★ The Second Jungle Book
★ Johnny
★ Aberration
★ Beast
★ The New Legend of Shaolin

புதிய பழைய திரைப்பட வீடியோ பிரதிகளையும் ஆங்கிலப்பட வீடியோ CD க்களையும் வாடகைக்கு பெற்றுக் கொள்ளலாம்.

நிதர்ஷன் வீடியோ

ஏழாலை தெற்கு, மயிலங்காடு. (59398)



இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 24-09-1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org